விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 17 புதன்கிழமை (31.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பினராக இந்தியா திட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராக இந்தியா முயன்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராக இணைந்து கொள்வதற்கு இந்தியா கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்திய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசும் முழுமையான ஆதரவுகளை வழங்கி வருகின்றது. பாதுகாப்புச் சபையில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயினால் பாதிப்படைந்த யுவதி வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த இளம்பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மிசரி, வரணியைச் சேர்ந்த தவமொறிஸ் சுஜிந்தா (வயது–28) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார். டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப யுவதி நேற்று முன் தினம் இரவு 8.45 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

# புலனாய்வு செயற்பாடு விஸ்தரிப்பு;

# நாடு கடந்த தமிழீழ அரசு உடையும்

## அமைச்சர் றோகித தெரிவிப்பு

(கொழும்பு)

"நாடு கடந்த் தமிழீழ அரசு என்ற பெயரில் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆரம்பித்துள்ள புதிய அச்சுறுத்தலை நாம் நன்றாக அறிவோம். அந்த கட்டமைப்பை நாங்கள் நிச்சயம் உடைப்போம்" என்று வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளரின் நிபுணர்கள் குழு போர்க் குற்றங்களை விசாரணை செய்யாது

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக நியமிக்கப்படவுள்ள நிபுணர்கள் குழு போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தாது என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை மற்றும் அணி சேரா நாடுகளிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்த நிபுணர்கள் குழு ஆலோசனை வழங்கும் குழுவே அன்றி இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் விடயங்களையும் அதன் அடிப்படைகளை (20 ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முதலாம் கட்டைப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் ஒருவர் மரணமடைந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறையிலிருந்து கரவெட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலும் நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலும் ஒன்றுடன் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்திருந்த மூதாட்டி தாக்கப்பட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனித்திருந்த மூதாட்டி ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.


அதேயிடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை பகவதி (வயது–77) என்ற மூதாட்டியே படுகொலை செய்யப்பட்டவராவார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கடமைக்கு முப்படையும் அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தினத்தன்று பாதுகாப்பினை மேற்கொள்ளும் பொலிஸாருக்கு உதவும் பொருட்டு முப்படையினரின் சேவைகள் கோரப்பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவல்களை வெளியிட்டார். தேர்தல் தினத்தன்று கடமையில் (19 ஆம் பக்கம் பார்க்க)






## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கே.கே.எஸ். வீதியில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் உடு வில் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் பிரதேச செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (சு)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (M.Ed) பட்டத்தினைப் பெற்ற யா/வயா விளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியரான

**திருமதி ஜெயந்தினி தவசீலன்**
B.A (Hons), SP.Trd (Tamil), PGDE (Merid)
M.Ed, SLTS-2-II
அவர்களையும்



பட்டப்பின் டிப்ளோமா (PGDE) பட்டத்தினைப் பெற்ற யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய ஆசிரியரான



**திரு. சிவலிங்கம் ரதிஸ்குமார்**
HNDA, PGDE (Merid), SLTS 3 - I
அவர்களையும்

தமிழில் முதுகலைமாணி (M.A) பட்டத்தினைப் பெற்ற யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர்களான

**திரு. கனகசபை உருத்திரகுமாரன்** (J.P)
B.A, PGDE , M.A, SLTS - I
அவர்களையும்





**திரு. சிவபாதசுந்தரம் சிவகுமார்**
B.A (Hons), M.A, SLTS - 3 - I
அவர்களையும்

பாராட்டுவதோடு, இவர்கள் மேன்மேலும் பல பட்டங்களையும் பெற்று வாழ்வில் வளம் பெற பெருமையுடன் வாழ்த்துகின்றேன்.

வாழ்த்தும் அன்புள்ளம்
**திரு.க.தவசீலன்**
(ஆசிரியர், யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி)

(சி-4943)


## கல்விமாணி விரிவுரைகள் சனியன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தினால் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்படுகின்ற கல்விமாணி விரிவுரைகள் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என இணைப் பாளர் சி.தயாபரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை சகல விரிவுரையாளர்களை யும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-14)

## சுவாமி இராஜேஸ்வரானந்தர் இன்று யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமகிருஷ்ண மிசனின் மூத்த துறவியான ஸ்ரீபத் இராஜேஸ் வரானந்தர் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதருகிறார்.

யாழ்ப்பாணம் வரும் இவர் உரும் பிராயில் ஆரம்பிக் கப்படவுள்ள இராம கிருஷ்ண மிசன் வழிபாட்டு மண்டப மற்றும்வேலைக ளைஒழுங்கமைப துடன்சனிக்கிழ மைகொழும்பு திரும்புகிறார்.

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியிலும் யாழ்ப் பாணம் சிவ தொண்டன் நிலை யத்திலும்சுவாமி யைதரிசித்து ஆசீர் வாதம்பெறமுடி யும்எனதாவடி இராமகிருஷ்ண சமித் செயலாளர் அறிவித்துள் ளார். (சு)

## சிறுவர் முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசா லைகளில் கல்வி பயிலும் விசேட தேவையு டைய மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான சிறுவர் முகாம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திரு நெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத் தில் நடைபெறும். (எ)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை**

"The Vital Power of Culture Amidst the Globalization Waves"

| | | |
|---|---|---|
| பேருரை வழங்குநர் | : | *பேராசிரியர் சே.பாஸ்கரன்,* மெய்யியல் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| இடம் | : | கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| திகதி | : | 31.03.2010 புதன்கிழமை |
| நேரம் | : | மு.ப. 10.00 மணி. |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.

(சி-4946)



## சுயேட்சைக்குழு-10
## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

அன்பார்ந்த யாழ். தேர்தல் தொகுதி தமிழ் மக்களே!



Dr.S.N. Thanihasalampillai
B.A, M.A, PhD.
SLEAS Class I, Dip. in Ed, Dip. in Ed Management.
Senior Consultant

- சுயநலத்துக்காக வீரவசனங்களைப் பயன்படுத்துவோரை நம்பி ஏமாற வேண்டாம்.
- பாராளுமன்ற உறுப்புரிமையைத் தமது சொந்த வியாபாரத்துக்காகவோ, சொகுசு வாழ்க்கைக்காகவோ பயன்படுத்துவோரின் கதைகளையும் நம்பி ஏமாற வேண்டாம்.
- அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிய வேண்டாம்.

கல்வி, விவசாயம், மீன்பிடி, பொருளாதாரத் துறைகளில் எமது மண்ணை மீண்டும் மிகச்சிறப் படையச் செய்யக்கூடிய, மக்களோடு மக்களாக இருந்து இக்கட்டான சூழ்நிலைகளிலும், துணிச் சலாகச் சேவை செய்த, செய்யக்கூடிய ஆற்றல் கொண்ட **கலாநிதி க.நா.தணிகாசலம்பிள்ளையை** ஆதரித்து வெற்றி பெற வாக்களியுங்கள்.

**சுயேட்சைக்குழு-10** X

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

-யாழ்ப்பாணச் சமூக அபிவிருத்தி நலன்விரும்பிகள்



## யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு 2010

இடம்: பாடசாலை முன்றல்
காலம்: 31.03.2010 (இன்று) புதன்கிழமை
பி.ப. 1.00 மணி

**தலைவர்:**
திரு.க.குமரேஸ்வரநாதன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்:**
வாழ்நாள் பேராசிரியர்
உயர்திரு.பொ.பாலசுந்தரம்பிள்ளை
(Ph.D,Durham U.K)
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு. கு. சரவணபவானந்தன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், வேலணை)
திரு.ச.வாமதேவன் (அதிபர்)
(யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)
திரு.மா.இளம்பிறை
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு.ச.சிவராசா (போல்)
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(சி-4947)

# இன்று ஒரு தகவல்

## இல்லறத் துறவி

"இல்லற வாழ்க்கை போரடிக்கிறது. பேசாமல் துறவியாகி விடலாமா – என்று பார்க்கிறேன்" என்றார் ஒருத்தர்.

"ஆக வேண்டியது தானே" என்றேன்.

"அதுதான் பார்க்கிறேன். ஆனால் சம்சாரமும் பிள்ளை குட்டிகளும் விடமாட்டேன் என்கிறார்கள். அதுதான் இடைஞ்சலாக் இருக்கிறது" என்றார்.

"துறவு" என்றால் ஏதோ ஒரு காவி வேஷ்டியை எடுத்துக் கட்டிக் கொண்டு – தாடியை நீளமாக வளர்த்துக் கொண்டு காடு எங்கேயிருக்கு? என்று தேடிக்கொண்டு போய் ஒரு நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்து விடுவது என்று இவரை மாதிரி பல பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ரொம்பத் தப்பு.

துறவியாக போய்விடுவது என்றால் ஒரேயடியாக சாமியாராக போய்விடுவதல்ல. அது வேறுமாதிரி.

இல்லறத்தில் இருந்து கொண்டே கூட துறவியாக இருக்க முடியும். அப்படி முடியும் என்று நிரூபித்துக் காட்ட அந்தக் காலத்திலேயே ஒருத்தர் இருந்தார்.

அவர் வேறுயாருமில்லை. சீதையின் தந்தை ஜனகர். அப்பொழுது மிதிலா நகரிலிருந்த பல முனிவர்கள் இதை நம்பவில்லை. ஜனகர் மீது அவர்களுக்கெல்லாம் சந்தேகம்.

"அதெப்படி? ராஜ போகங்களுக்கு மத்தியில் துறவியாக இருக்க முடியும்?" என்று பேசிக் கொண்டார்கள்.

இந்த செய்தி ஜனகரின் காதுகளுக்கும் எட்டியது.

ஜனகர் பார்த்தார். "சரி... இந்த முனிவர்களுக்கு 'துறவு' என்றால் என்னவென்பதை புரிய வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அடுத்த நாளே அரண்மனையிலிருந்து ஒருவரை முனிவர்களிடம் அனுப்பினார்.

"நாளைக்கு மதியம் நம் மன்னர் உங்கள் எல்லோருக்கும் ஒரு விருந்து வைக்கப் போகிறார். நீங்கள் எல்லோரும் அதில் வந்து கலந்து கொள்ள வேண்டும்" என்றார்.

அந்த முனிவர்கள் நல்ல சாப்பாட்டை கண்ணால் பார்த்தே ரொம்ப நாளாச்சு. அப்படி இருக்கும்போது அரண்மனை விருந்தென்றால் வேண்டாமென்றா சொல்வார்கள்?.

அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்தில் அத்தனை பேரும் அரண்மனை விருந்து மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் இலைகள் போட்டு விதவிதமான உணவுகளைப் பரிமாறினார்கள்.

ஆனால் அதில் வேடிக்கை என்னவென்றால்.... ஒவ்வொரு இலைக்கும் மேலே ஒரு நீளமான தலைமுடி தொங்கிக் கொண்டிருந்தது.

அது எப்பொழுது சாப்பாட்டில் விழுமோ என்று அதைப் பார்த்துப் பயந்து கொண்டே முனிவர்கள் சாப்பிட்டார்கள்.

மறுபடியும் நிறைய கொண்டுவந்து வைத்தார்கள். இவர்களும் வயிறு புடைக்க சாப்பிட்டு முடித்தார்கள். எல்லோரும் சாப்பிட்டு முடிந்தபின் ஜனகர் வந்து முனிவர்களை வணங்கினார்.

"சாப்பாடு நன்றாக இருந்ததா?" என்று கேட்டார் அதுமட்டுமல்ல. சாம்பார் எப்படி இருந்தது? கறி எப்படி இருந்தது? வறுவல் எப்படி இருந்தது? என்று வரிசையாகக் கேட்க ஆரம்பித்தார்.

அவர்கள் யாரும் பதில் சொல்லவில்லை. பேசாமல் இருந்தனர். உடனே ராஜா அந்தப் பக்கம் திரும்பி "என்ன? எல்லோருக்கும் சரியாக சாப்பாடு போட்டீர்களா? இல்லையா?" என்று கேட்டார்.

உடனே முனிவர்கள் வாயைத் திறக்க ஆரம்பித்தார்கள்.

"அவர்களை ஏன் கேட்கிறீர்கள்? நாங்களே பதில் சொல்கிறோம். அவர்கள் ரொம்ப நன்றாக பரிமாறினார்கள். நாங்களும் வயிறு புடைக்க சாப்பிட்டோம்" என்றார்கள்.

"எப்படி இருந்தது என்று கேட்டால் அது ஏன் உங்களால் பதில் சொல்ல முடியவில்லை" என்றார் ராஜா.

"எப்படிச் சொல்ல முடியும்? எங்களுடைய நினைப்பு முழுவதும் சாப்பாட்டில் எங்கு இருந்தது? அந்தத் தலை முடி எப்பொழுது சாப்பாட்டில் விழுமோ? என்று அதைத் தானே நினைத்துக் கொண்டிருந்தோம்" என்றார்கள்.

இப்பொழுது ஜனகர் சொன்னார் :

அதே மாதிரித்தான் நானும் இருக்கிறேன். பிரம்மத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் எனக்கு இந்த ராஜ போகங்கள் சுகமா, இல்லையா என்று கேட்டால் சொல்லத் தெரியுமா?" என்று கேட்டார் ஜனகர்.

முனிவர்களுக்கு அதன் பின் தான் தெளிவு உண்டானது. ஒருத்தர் எங்கே இருந்தால் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்கிறார் என்பது தான் முக்கியம்.

இல்லறத்தில் இருந்து கொண்டு பிரம்மத்தை நினைத்துக் கொண்டிருப்பவர்களும் உண்டு. துறவறத்தில் இருந்து கொண்டு இல்லறத்தை நினைத்துக் கொண்டிருப்பவர்களும் உண்டு. நினைப்புதான் முக்கியம்.

இந்தக் காலத்து இல்லறத்துறவி ஒருவரிடம் கேட்டேன். ஏன் சேர்... உங்களை இப்படி உட்கார வைத்து உங்களுடைய சாப்பாட்டுக்கு மேலே ஒரு தலைமுடி தொங்கவிடுவது போல் செய்தால் உங்கள் கவனம் எதில் இருக்கும்? என்றேன்.

"என் கவனம் சாப்பாட்டில் தான் இருக்கும். முடியைப் பற்றி கவலைப்படமாட்டேன்" என்றார். ஏன்? என்று கேட்டேன்.

"எங்கள் வீட்டில் சாப்பாட்டில் தலைமுடி கிடப்பது சகஜம். அதனால் அது பழகிப் போச்சு!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சைவசமய அபிவிருத்தி கழகத்தின் சமய அறிவுப்பரீட்சை பெறுபேறுகள்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தால் நடத்தப்பெற்ற சைவசமய அறிவுப் பரீட்சையில் பெறுபேறுகளை பரீட்சைச் செயலர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

தரம் - 01

சி. சிவநயனி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ந. சுவர்ணா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), கு. தேனுகன் (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

தரம் - 02

ர. மதுமிதா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), மு. மரிய ரோஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), மூவர் மூன்றாமிடம் – லி. தீபிகா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), வி. நிதுஷா (ஆனைப் பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), சி. ராகப்பிரியா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

தரம் - 03

த. சங்கவி, மோ. கயல்விழி (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்), இருவர் மூன்றாமிடம்–ஜெ.அனோஜ் (ஆனைப் பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), உ. சாருனுகா (தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி).

தரம் - 04

அ. கஜனஸ்ரீஷாயன், ர. நிஷாளினி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி,அ. அபிநந்தன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

தரம் - 05

த. நீலலோகன் (யாழ். இந்து கல்லூரி), பா. கஜானி (வேம்படி மகளிர்உயர்தரப்பாடசாலை), க. அபர்ணா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

தரம் - 06

மோ. ஆரபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ப. காயத்திரி (மொடேன் கல்வி நிலையம், காரை நகர்), த. பேணுதர்சிகா (சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி).

தரம் - 07

ரா. லக்ஷிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சூ. புவிதா (மெத டிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை), இருவர் மூன்றாமிடம் – அ. உதயமாலினி (நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்), ஸ்ரீ. வேதிகா (அளவெட்டி அரு ணோதயக் கல்லூரி).

தரம் - 08

தே. லக்ஸ்மன் (யாழ். இந்துக் கல்லூரி – தங்கப்பதக்கம்), பா. அபிராமி (கொக்குவில் இந்துக் கல்லூரி), லி. நேருஜா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

தரம் - 09

வே. கிருஷ்ணவி (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), க. நவநிதி (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), க. சோபிதா (நயினாதீவு மகா வித்தியாலயம்).

தரம் - 10

செ. கஜானன் (யாழ். இந்துக் கல்லூரி), யோ. லோஜீபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ. வினு (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் - 11

ச. யதுசன் (யாழ். இந்துக் கல்லூரி), மு. மிதுலா (இணுவில் மத்திய கல்லூரி), சி. நிகேதன் (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் - 12

வி. ராஜினி (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி), பூ. செல்வதியம்மா (துர்க்காபுர மகளிர் இல்லம்), ச. சோபனா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

தரம் - 13

ச. பிரதர்சனா, க. கயந்தினி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ப. சிந்துஜா (நயினாதீவு மகா வித்தியாலயம்).

ஓ

## நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## இராசி பலன்

31-03-2010
(பங்குனி 17 , புதன்கிழமை)
பிரதமை காலை 6.56 மணிவரை
துதியை பின்னிரவு 5.31 மணிவரை
சித்திரை முன்னிரவு 9.35 மணிவரை
இராகுகாலம் 12.12 - 1.42 மணிவரை
சுபநேரம் 4.42- 6.12 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், தேகநலன். |
| இடபம் | சத்துரு ஜெயம், தொழில் முன்னேற்றம், பெரியோரால் நன்மை, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | புத்திரரால் கவலை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், புதிய திருப்பம். |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, சுபகாரியம், தொழில் சிந்தை, மனச்சஞ்சலம். |
| சிங்கம் | கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, போசன நன்மை, வாகன சுகம். |
| கன்னி | வேலைச்சுமை, விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், ரோகநிலை. |
| துலாம் | தொழில் சிந்தை, பாராட்டு, போசன சுகம், அதிக பிரயாசை. |
| விருச்சிகம் | சுபசெலவு, சயன சுகக்குறைவு, பிரயாணம், முயற்சி தாமதமாகும். |
| தனுசு | கலந்துரையாடல், கீர்த்தி, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| மகரம் | அதிகாரம், தூரதேசச் செய்தி, ஆரோக்கிய நிலை, சகோதரர் உதவி. |
| கும்பம் | ஆன்றோர் சந்திப்பு, பிரயாண நன்மை, புதிய திட்டமிடல், பிதா சிந்தை. |
| மீனம் | எதிர்பாராத பகை, ஆரோக்கியக் குறைவு, போசன சுகம், முயற்சி தாமதம். |

வளவன்

## சமூக செயற்பாட்டாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி கல்வி வலயத்தில் யுனிசெவ் ஆதரவுடன் மாணவர் வரவினை ஊக்கப்படுத் தல் தொடர்பான வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக கள சமூக செயற்பாட் டாளர்களாக (field Social Mobilizer) இருவர் ஒப்பந்தம் அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.


மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி சமூகவியல் பட்டதாரியாக இருப்பதுடன் கணனி மற்றும் ஆங்கில அறிவுடையவராகவும் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் எனவும் 16 ஆயிரம் ரூபா மாதாந்த வேதனமாக வழங்கப்படும் என்றும் மேலதிக விபரங்களை வலய கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா அறிவித்துள்ளார். ஓ

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 70 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 35 | 45 | 40 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 80 | 90 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | 60 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 70 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 30 |

# பிரேமதாசவை நாம் சந்தித்த போது ஒரு நாடு இரு தேசம் என்பதை வலியுறுத்தினோம்

## பிரசாரக்கூட்டத்தில் சி.வீ.கே.சிவஞானம்



தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் சமாதானத்திற்கு சாதகமானது அல்ல என்று தென்னிலங்கை கூறுகிறது. ஆனால் அதுவல்ல உண்மை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள விஞ்ஞாபனம் தான் ஆக்கபூர்வமான சமாதானத்தை நோக்கியதாகும்.

தமிழ் பேசும் மக்களது அடிப்படைக் கொள்கையான வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சிக் கட்டமைப்பு, சுய நிர்ணய உரிமை அங்கீகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய தீர்வு ஒன்று எட்டப்படுமானால் அதுவே சமாதானத்திற்கான திறவுகோலாக இருக்கும்.

இவ்வாறு நல்லூர் கொண்டலடி வைரவர் கோவில் முன்றலில் கடந்த சனிக் கிழமை நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளருமான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 1991ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஜனாதிபதி பிரேமதாசவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த எம்மை அனுப்பிய போதும் நாம் ("We are two nations in one country") நாட்டில் இரு தேசியங்கள் பற்றித் தெரிவித்தோம். அந்த நிலைப்பாட்டிலேயே இன்னும் இருக்கின்றோம். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் அவ்வாறே 2001, 2004 தேர்தல்களுக்கு முன்பும் பின்பும் இன்றுவரை கடைப்பிடித்து வருகிறது.

தான் வரித்துக்கொண்ட இலட்சியத்தினை சாத்வீக வழியில் உண்ணா நோன்பிருந்து தன்னுயிர் நீத்த அறவழிப்போராளி தியாகி திலீபனின் நினைவுத்தூபியின் அநாகரிகமான சிதைப்பு அதை நிர்மாணிப்பித்தவன் என்ற முறையிலும் , அது சேதப்படுத்தப் பட்டதற்கு பின்பும் மீண்டும் அதை புதுப்பித்தவன் என்ற முறையிலும் நான் மிகவும் வேதனைப்படுகின்றேன். வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகளை அழிப்பது நாகரிகமான செயல் அல்ல.

விடுதலைப்புலிகள் யாழ். குடாநாட்டை தமது பூரணக்கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் கூட அவர்கள் சிங்கள, பௌத்த வரலாற்றுச்சின்னங்களுக்கோ பதிவுகளுக்கோ எது வித சேதமோ பாதிப்போ ஏற்படுத்தவில்லை என்பதை இந்த நடவடிக் கையில் ஈடுபட்டோர் புரிந்துகொள்ள வேண்டும். அரசியலில் தனி மனிதர்களை குறி வைத்து தாக்குவது தவிர்க்கப்படுதல் நாகரிகமானதாகும் என்றார். (ந)

Foreign Student Admission Officer Available Here

A/L 3 பாடங்களில் சித்தி உள்ளதா???

Spot Admission

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் கல்லூரிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள்.

SONA COLLEGE OF TECHNOLOGY
SALEM, INDIA.
Prof.M.A .MANIKANDAN B.Sc(Hons), MCA, M.Phil, Ph.D
The Director,
International Admissions & Relations,

Free Advice

| வடமராட்சியில் | தென்மராட்சியில் | யாழ்ப்பாணத்தில் |
|---|---|---|
| Beacon Study Centre, Nelliady | Science Centre ,Chavakachcheri மணியம்மாஸ்ட்ர் (சயாகலடச் சந்தி) | Science hall |
| 30.03.2010 செவ்வாய்க்கிழமை 9.30am | 31.03.2010 புதன்கிழமை 09.00am | 01.04.2010 வியாழக்கிழமை, 11.00am |

மாணவர்களையும் பெற்றோர்களையும் இந்நிகழ்வில் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE. AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

V4 Educational Consultancy(Pvt)Ltd
"Catalyst for your higher studies"
T.P- 0773867257
0775936343
0217200999
Head Office-
#7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06,
Web: http://www.v4edu.com
Branch-
10, Palaly Road, Jaffna.
Email: mail@v4edu.com
(சி-49)

பொறியியல் துறை சார்ந்த மாணவர்களுக்கான !!!

Advanced Diploma in Architecture CAD
(With 3D Max Modeling)
- Online Class (One Month & Full Time) -

இக் கற்கை நெறியானது பொறியியல் துறைசார்ந்த மாணவர்களுக்கும் மற்றும் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வரைகலை தொழில்நுட்பவியலாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள கற்கை நெறி.

இந்தியாவில் இருந்து வருகை தரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 - 2 மணிவரை பிரிவு - 01
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை மாலை 4 - 8 மணிவரை பிரிவு - 02

வகுப்பு ஆரம்பம் - 05/04/2010 உடன் பதிவுகளை மேற்கொள்ளவும் !!!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862
(சி-4947)

தேவை

Net Cafe ற்கு கணனி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை

(அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு
கணபதி நெற்
320, பலாலி வீதி,
கந்தர்மடம்.
021 222 3620
(990)



# மழையுடன் மின்னல் தாக்கும் என எச்சரிக்கை

(கொழும்பு)

மழையுடன் கூடிய காலநிலையின் போது நாடு முழுவதும் மின்னல் தாக்கமும் ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாக வளிமண்டல வியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக இத்தகைய அனர்த் தங்கள் ஆங்காங்கே இடம்பெற்றதாகத் திணைக்களத்தின் கடமை அதிகாரி பீ.டி ஆனந்த பெரேரா தெரிவித்தார்.

மழை பெய்யும்போது தொலைபேசி பாவிப்பது மற்றும் வெளியில் நடமாடுவது என்பவை இத்தகைய அனர்த்தங்கள் ஏற் படக் காரணமாகுமெனக் கடமை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மின்னல் ஏற்படும்போது அவதானத்து டன் செயற்படுவதன்மூலம் அனர்த்தங்க ளைத் தவிர்கக முடியுமென்றும் அவர் கூறினார். நாட்டின் பல பகுதிகளிலும் கடும் காற்று வீசக்கூடும் எனவும் வழிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-4)

# யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் டெங்கு நோய் தடுப்புவாரம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் டெங்கு நோய் பரம்பல் உள்ள இடங்களை அழித்தொழிப்பதற்காக யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதியின் வழிகாட் டலின் கீழ் டெங்கு நோய் தடுப்பு வாரம் வெற் றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ் சிவில் நிர்வாக பொதுமக்கள் தொடர்பு பிரதம இணைப்பாளர் பிரிகேடியர் டெல்மை ஜபி தெரி வித்துள்ளார்.

டெங்கு நோய் ஒழிப்பு செயற்திட்டம் தொடர் பாக இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்ட இந்நிகழ்வு நேற்று காலை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிவில் நிர்வாக தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றபோது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள தாவது,

இலங்கையின் அனைத்து பிரதேசங்க ளிலும் டெங்கு காய்ச்சலானது தற்போது பர வும் நோயாக முன்னிலையிலுள்ளது.

விசேடமாக யாழ்ப்பாண பிரதேசம் டெங்கு காய்ச்சலில் முதன்மை வகிக்கின்றது. இப் பிர தேசத்தில் கடந்த வருடத்தில் 300 பேர் இனம் காணப்பட்டு அதில் 6பேர் இறந்துள்ளனர். 2010 இல் கடந்த இரண்டரை மாதங்களில் 1409 பேர் இனம் காணப்பட்டு அதில் 15 பேர் இறந்துள்ளனர். இதன்படி இன்றுவரை மொத் தமாக 1709 பேர் இனம் காணப்பட்டு 21 பேர் இறந் துள்ளமை கவலைக்குரியதொன்றாகும்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் டெங்கு நோய் எச்சரிக்கை மிக்கதாக நகரும் வேளை 30 வருடகால பயங்கரவாதத்தால் பாதிப்படைந்த இம்மக்களுக்கு ஏற்பட்ட இந்நோயானது கரு ணையற்ற விளைவுகளை காட்டியுள்ளது.

உங்கள் உயிர் பாதுகாப்பு பெறும் முக மாக டெங்கு நோய் பரவலாக் கூடிய நுளம்பு மற் றும் குடம்பிகளை அழிக்க இவை பெருகு மிடங் களை இல்லாதொழிக்க முடிந்த அனைத்தை யும் செய்வோம்.

டெங்கு நோய்க்கெதிராக எம்முடன் இணைந்து செயற்பட அனைத்து அயலவர்க ளுக்கும் இது பற்றி அறிவுறுத்தியுள்ளோம். இந்நோயிலிருந்து யாழ் மக்களை பாதுகாத் திட நாம் அனைவரும் கைகோர்த்து நிற் கின்றோம்.

நுளம்புகள் பெருகும் சூழலை அறியா மையின் காரணமாக ஏற்படுத்தியுள்ளனர். அவ்வாறானவர்களுக்கு முழுமையான அறி வுரை வழங்கி நோய்த்தடுப்பு நடவடிக்கை யின் பங்காளிகளாக மாற்றுவோம்.

யாழ் படைத்தளபதியின் வழிகாட்டலின் டெங்கு நோய்தடுப்பு வாரத்தினை ஆரம்பித் துள்ளோம். இதற்கு இலங்கை இராணுவீரர் கள் முழு ஒத்துழைப்பையும் வழங்க ஆர்வ மாகவுள்ளனர். யாழ். மாவட்டம் முழுவதும் டெங்கு நோய் தடுப்பு வாரம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது ஓர் முதற்கட்டமாகும் என் றார். (2-30)

# ஏப்பிரல் 5ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் சுவரொட்டிகள் நீக்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 08 ஆம் திகதி நடை பெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் நீக்கப்படும் என்றும் வேட் பாளர்களும் அவர்களது ஆதரவா ளர்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண் டும் என்றும் தேர்தல்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவ ரட்ண கேட்டுக்கொண்டார்

சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் கட்அவுட்டுக்களை அகற்றும் பணி தொடர்ந் தும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தேர்தல் தொடர்பான ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட பலவாகனங்கள் பொலி ஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப் பிட்டார்.

பொதுத்தேர்தல் தொடர்பில் இது வரை 208 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன இதன் அடிப்படையில் 130 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேலும் பெருந் தொகையா னோர் கைது செய்யப்படுவதற்காக பொலிஸா ரால் தேடப் பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

தேர்தலை அமைதியான முறையில் நடத்திமுடிப்பதற்கு பொது மக்களினதும் ஆத ரவாளர்களினதும் ஒத்துழைப்பு அவசியம் என்றும் குறிப்பிட்டார். (ஓ-4)


பொருளியல் ஆசிரியர் S.வரதராஜன்

அவர்களிடம் கல்வி கற்ற பல்லாயிரக்கணக்கான பழைய மாணவர்களும், அவர்களின் குடும்பங்களும், உறவுகளும் இணைந்து கொள்கைக்காக களம் இறங்கும் எமது ஆசிரியரின் சின்னமாகிய சைக்கிளுக்கும், வெற்றி இலக்கமாகிய பத்திற்கும் (10) வாக்களிப்போம்.

எம்மை உயர்த்திய ஆசிரியரை அதிகூடிய விருப்பு வாக்குகளால் வெற்றியடையச் செய்வோம்

-பழைய மாணவர்கள்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சி

(தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)



X 10




# துயரத்தில் மூழ்கியிருக்கும் வன்னி மக்களை இயல்புக்கு கொண்டு வருபவர் டக்ளஸ் தேவானந்தா

## அனலைதீவு விஷ்ணு ஆலய குருக்கள்

மனிதன் மனிதனாக இருக்க வேண்டும். அந்த வகையில் நாம் மனிதர்களாக இருந்து எமக்கு வாழ்வளித்து இந்தப் பகுதியின் உட் கட்டமைப்பு வசதிகளை எல்லாம் செய்து தந்தி ருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எங்களது முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டுமென அனலைதீவு விஷ்ணு தேவாலய குருக்கள் வெங்கடேஸ்வர சர்மா கேட்டுக்கொண்டார்.


அண்மையில் அனலைதீவிற்கு அமைச் சர் விஜயம் செய்திருந்த போது நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய குருக்கள் வெங்கடேஸ்வர சர்மா , தீவுப் பகுதிகளுக்கு எத்தனையோ பேர் வந்து எதை எதையெல்லாமோ பேசி இருக்கலாம். எனினும் அவர்கள் எவருமே எங்களுக்கு எதையுமே இதுவரையில் செய்ததும் கிடை யாது. இனியும் செய்யப்போவதும் கிடையாது என்றும் 90 களில் இருந்து எம்மை பாது காத்து அனைத்து வழிகளிலும் உதவி செய்து வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்றும் குறிப்பிட்டார்.

இன்று வன்னியிலே பல்வேறு துன்ப, துயரங்களில் மூழ்கியுள்ள மக்களை படிப்படி யாக தனது தொடர் முயற்சிகளின் மூலம் இயல்பு நிலைக்குக் கொண்டு வருகின் றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என் றும் எப்போதும் அடுத்த கட்டமாக மக்களைப் போய்ச்சேரக்கூடிய - மக்கள் உச்ச பயன் பெறக் கூடிய எந்தத் திட்டத்தை முன்னெடுக் கலாம் என்பது பற்றியே சிந்தித்துக்கொண் டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவை நாம் பலப்படுத்த வேண்டியவர் களாக உள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே மிகப்பெரிய நவீன நூலகம் அண்ணா பல்கலைக்கழகத்தில்

(சென்னை)



சென்னை அண்ணா பல்கலைக் கழக நூலக பிரிவு சார்பில் தகவல் எழுத்து தொடர்பு மற்றும் வெளிக் கொணரும் தன்மை என்ற தலைப் பில் 2 நாள் கருத்தரங்கு நடக்கிறது. துணைவேந்தர் மன்னர் ஜவகர் கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசியதாவது, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நூலகம் மிக முக்கியம். இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற இந்தியா முழுவதும் பல நூலகங் களில் இருந்து 70க்கும் மேற்பட்ட வர்கள் வந்துள்ளனர். அவர்களின் கருத்துக்கள் மாணவர்களுக்கு பய னுள்ளதாக இருக்கும். அண்ணா பல்கலைக்கழகத்தில் சகல வசதிக ளுடன் கூடிய அதிநவீன நூலகம் அமைக்கப்படும்.

பல்கலைக்கழக நூலகங்களில் இந்தியாவிலேயே மிகப்பெரியதாக இந்த நூலகம் இருக்கும். புதிய நூலகம் கட்டுவதற்கான பேச்சு நடந்து வருகிறது. விரைவில் அதற்கான பணி கள் தொடங்கப்படும். இவ்வாறு துணை வேந்தர் மன்னர் ஜவகர் கூறினார். கிண்டி பொறி யியல் கல்லூரி முதல்வர் சேகர், நூலக துறை இயக்குனர் பாலு, நூலக அதிகாரிகள் பாண்டி யராஜ், கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஓ-4)

# புத்தளத்தில் இடம் பெயர்ந்தோருக்கென 37 வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு)

வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் புத்தளம் மாவட்ட நலன்புரி மற்றும் மீள்குடியேற்ற கிராமங்கள் மற்றும் தனியார் வீடுகளில் தங்கியிருப்போர் வாக் களிக்க வென 37 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன என புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி கிங்ஸ்லி பெர் னாண்டோ தெரிவித்தார்.

அங்கு யாழ். வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த 26,582 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 4ஆயிரத்து 547 பேர் யாழ் . மாவட்டத்தைச் சேர்ந்தவர் கள். 22 ஆயிரத்து 035 பேர் வன்னி மாவட் டத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் வாக்க ளிக்க 22 நிலையங்களும் வன்னி மாவட்டத் தைச் சேர்ந்தோருக்கு 37 வாக்களிப்பு நிலை ளயங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இரு மாவட்ட மக்கள் ஒரே கிராம அதிகாரி பிரிவில் வசிப்பதால் ஒரு பிரிவில் இரு வாக்களிப்பும் இடம்பெற ஏற்பாடு செய்துள்ள தாகவும் அதேவேளை இடம்பெயர்ந்த வாக்கா ளர்களுக்காக 3 வாக்கெண்ணும் நிலை யங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஒன்று யாழ்ப்பாணத்திலும் 2 வன்னியிலும் ஏற்படுத் தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (2-4)

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் மயக்கம்

வர்த்தக நிறுவனம் ஒன்றில் பணி புரியும் இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம் பெற்ற சம்பவத்தில்ள கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ்.சுரேசன் வயது 32 என்பவரே இந் நிலைக் குள்ளானார். (2-30)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இடம்பெயர்ந்து வந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச சீருடை, கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வாளிகள், கரும்பலகைகள் உலகப்படங்கள் போன்ற பல பயன்பாட்டிற்கான உபகரணங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சகல பாடசாலைகளுக்கும் பகிர்ந்து வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வலய கணக்காளர் ஆ. கிரிதரன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் வலயத்தின் புதிய கட்டடத் தொகுதியில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## 20 வருடங்களின் பின்னர்

# மண்டைதீவுக் கடற்கரையில் அந்தியேட்டிக் கிரியைகள்

(வேலணை)

தீவகம் மண்டைதீவு தெற்கு பகுதியிலுள்ள தலைகீரி இந்து மயானத்துக்கு அருகில் கடற்கரையில் அந்தியேட்டி கிரியைகள் (இறந்தவர்களுக்கான பிதிர்கடன்) செய்வதற்கு அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதன்படி இப்பகுதியில் அமரர் ஆறுமுகம் நடராசா என்பவரின் ஞாபகார்த்தமாக அந்தியேட்டி கிரியைகள் செய்யும் மண்டபமும் அமைக்கப்படவுள்ளது.

இத்துடன் இப்பகுதியில் கடலுக்குச் செல்லும் பாதையில் இருந்த மண் அணை, முட்கம்பிகள் அகற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்கு விடப்பட்டதுடன் முதலாவது அந்தியேட்டி கிரியை நிகழ்விலும் இப்பகுதி பொதுசன தொடர்பு அதிகாரியான அபயக்கோண் கலந்து கொண்டார்.

இப்பகுதியில் மீளவும் அந்தியேட்டி கிரியை நிகழ்வுகள் சுமார் 20 வருடங்களின் பின்பு நடைபெற ஆரம்பித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-22)

## இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி

(வேலணை)

வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி இன்று புதன்கிழமை பி.ப ஒருமணிக்கு வித்தியா்லயத்தின் விளையாட்டு திடலில் அதிபர் க.குமரேஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் உபவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அவரின் பாரியாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-22)




## அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் சதாசிவ சங்கம் கால்கோல் விழா

1860 இல் ஆரம்பிக்கப்பட்ட அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடங்களான விவசாய செயற்பாட்டு ஆய்வு கூடம், கணனி வளநிலையம், சமையல் அறை என்பவற்றின் திறப்புவிழா மற்றும் சதாசிவ மலர் வெளியீட்டு விழா, பரிசளிப்பு விழா என்பன எதிர்வரும்2010வைகாசி மாதம் நடைபெறவுள்ளதால் இதற்கான கால்கோல் விழா 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சமூக பெரியார்களையும் நலன் விரும்பிகளையும் வெளிநாட்டு அன்பர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ

## ஆங்கில நாடக அரங்க இறுவட்டுகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் நெறிப்படுத்திய 'நான்கு ஆங்கில நாடகங்கள்' மற்றும் 'ஆங்கில மொழித்திறன் விருத்திக்கான வகுப்பறை அரங்கு' எனும் தலைப்புகளிலான இரு இறுவட்டுகளின் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி கலையரங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் ரி.மோகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.ஏ. யோகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் மையத்தின் தலைவர் எஸ். சுந்தரேஸ்வரன் விசேட விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

நாடக நெறியாளர் அறிமுகத்தை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. சரவணபவ ஐயரும், ஆங்கில மொழித்திறன் விருத்தி இறுவட்டுப் பற்றி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் எஸ். சுந்தரேசனும், நாடக இறுவட்டு பற்றி இளைப்பாறிய ஆங்கில கலாசாலை அதிபர் சோ. பத்மநாதனும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

மூன்று நாடகங்களின் தொகுப்புப் பற்றி ஆங்கிலமொழி போதனைப் பிரிவுத் தலைவர் எஸ். சுந்தரேஸ்வரன் உரையாற்றவுள்ளார். ஓ

## சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 56 ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 56 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் ஆசியுரையை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கா.சதானந்த சர்மா வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ் இந்துக் கல் லூரி அதிபர் வீ.கணேசராசா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்ப துடன் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் ''மதமும் மனிதனும்'' எனும் பொருளிலான சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவிலேயே சைவசமய அறிவுப் பரீட்சை, நீதிநூல் மனனப்போட்டி, கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்கான பரிசில் களும் வழங்கப்படவுள்ளன. ஓ

## யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்ய இப்போது நல்ல சந்தர்ப்பம் வாய்த்துள்ளது

### இலங்கை மத்திய வங்கி ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணஅபிவிருத்தி கடன் திட்டம் மற்றும் வடக்கின் வசந்தம் என்பனவற்றின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளினால் ஒன்றிணைக்கப்பட்ட கடன் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டாக்டர் அஜித் நிவாட்கப்ரால் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழிலாளர்கள் சுயமாக தொழிலில் ஈடுபட தொழில் கருவிகள் மிகவும் முக்கியமானதொன்று. அந்த வகையில் மீன்பிடி உபகரணங்கள், படகு இயந்திரங்கள் என்பன மீனவத்தொழிலில் ஈடுபடுவர்களுக்கு தேவை என்பது புரியும். தேவைகள் அதிகரிக்கும் போது தான் அங்கே வருமானமும் தேவைப்ப கின்றது. தேவையும் வருமானமும் அதிகரிக்கும் போது வாழ்க்கை நிலை சிறப்படைகின்றது.

இதற்காக தான் உங்கள் தேவைகளை நிறைவேற்ற வங்கியினால் கடன் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தை பெற நீங்கள் ஒவ்வொருவரும் தீர்க்கமான முடிவெடுத்து இக் கடனை பெற முயற்சிக்கிறீர்கள். இதையிட்டு நான் சந்தோசமடைகின்றேன் என்றார்.

உங்களிடம் தொழில் செய்வதற்குரிய உபகரணங்களோ, சொத்துக்களோ இருந்தால் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் உள்ளன.

யாழ்ப்பாண பிரதேசத்தினை அபிவி ருத்தி செய்வதற்கு எனக்கு இச்சந்தர்ப்பம் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. மத்திய வங்கி உட்பட ஏனைய நிறுவனங்களுடன் உதவியுடன் நாம் இதனை மேற்கொள்வோம் என்று உறுதியளித்தார். (2-30)

## பயிற்சி வகுப்புகளுக்கு சமூகமளிக்காதவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(அல்வாய்)

பாராளுமன்ற தேர்தல்கள் 2010 க்கான வழங்கல் பெறுதல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பிற்கு 67 பேர் அழைக்கப்பட்ட போதிலும் 42 பேர் சமூகமளித்தனர். சமூகமளிக்காத அலுவலர்களுக்கு பிறிதொரு தினத்தில் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் சமூகமளிக்காத பட்சத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-4)

## தமிழ்த்தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே இன்றும் எதிர்வரும் 2, 3, 4 ஆம் திகதிகளிலும் நடைபெறவிருந்த தமிழ்த் தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் எதிர்வரும் 10,11,12 ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டியில் நடுவர்களாக அழைக்கப்பட்டவர்களும் இவ் அறிவித்தலை கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ-4-29)





வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் சமேத வீரபத்திரர் சுவாமி தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதையும் சுவாமி தேரில் ஆரோகணிப்பதையும் பக்தர்கள் தூக்குக்காவடி மற்றும் காவடி எடுப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கோபி)





நவாலி ப்குதியில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட குடிநீர் விநியோக திட்ட நீர்த்தாங்கியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் மற்றும் விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் திறந்து வைக்கப்பட்ட நீர்த்தரங்கியையும் படங்களில் காணலாம்.
(படங்கள் கோபி)

# தோட்டப்பகுதிகளில் அதிக அளவில் தேர்தல் வன்முறைகள் -கபே

(கொழும்பு)

பொதுத்தேர்தல் காலத்தில் தோட்டத்தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் அதிகளவில் வன்முறைகள் இடம்பெறுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இந்த நிலை அதிகரித்துள்ளதாக கபே எனப்படும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் ஊடாக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் வசதி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளை பெறும் வகையில் அரசியல் கட்சிகள் பல்வேறு வியூகங்களை அமைத்து பல்வேறு சந்தர்ப்பங்களில் சூட்சுமமாகச் செயற்பட்டுள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்களது அடையாள அட்டைகள் உட்பட ஆவணங்கள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தொழில் சங்கத்தை நடத்திச் செல்லும் அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இது மிகவும் பாரதூரமானது.

கடந்த வார இறுதியிலும் , நேற்று முன்தினமும் நுவரெலியா , ஹட்டன், கொத்மலை ஆகிய பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதலால் சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக செய்திகள் சேகரிக்கச் செல்பவர்களின் கமரா போன்ற உடமைகள் பறிக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலைமையக்கட்டுப்படுத்த அந்தந்த தக்கட்சிகளின் தலைவர்களும் செயலாளர்களும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளர் ரசாங்க ஹரிஸ் சந்திர சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்டத்தில் தோட்டப் புறங்களில் பிரசார நடவடிக்கைகளின் போது தேர்தல் சட்டங்களை மீறும் செயல்கள் மற்றும் வன்முறைகள் இடம்பெறுவதுடன் வேட்பாளர்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெறுவதும் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (2-4)


மாபெரும் மலிவு விற்பனை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...
01:04.2010--10.04.2010 வரை
உயர்தரமான இறக்குமதி செய்யப்பட்ட தரை ஓடுகள் (Tiles) , சுவர் ஓடுகள் மற்றும் அனைத்து விதமான குளியலறை சாதனங்கள் அனைத்தையும் **40% விலைக் கழிவுடன்** பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்,
TPS சர்வதேச தனியார் நிறுவனம்,
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0775702253, 0777578277
(991)


## ஷான்சில்வாவின்
# கணனி தொடர்பான விசாரணைகளில் 156 கோடி ரூபா நிதிகுறித்து தகவல்கள் ?

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவின் தனிப்பட்ட உதவியாளராக கடமையாற்றிய கப்டன் ஷான் சில்வாவின் கணனி தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளில் 15 கோடி ரூபா நிதி பல நபர்களுக்கு பெற்றுக்கொடுத்தமைக்கான பட்டியல் மற்றும் அது தொடர்பாக இரகசியத் தகவல்கள் பலவற்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ள்தாக திவயின தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலின் அடிப்படையில் இரண்டு முன்னாள் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளுக்கு 72 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் ஊடகவியலாளர் ஒருவருக்கு 34 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரசார நவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரியொருவருக்கு 10 மில்லியன் ரூபாவும் மற்றுமொரு நபருக்கு 8.8 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர ஷான் சில்வாவின் உறவினரான பெண் ஒருவருக்கு 24 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பெருந்தொகையான பணம் வெளிநாட்டு அமைப்புக்களின் ஊடாக கிடைத்ததா என்பதை அறிய இரகியப் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2-4)


பிறந்த நாள் வாழ்த்துக்கள்



திரு.திருமதி றினிஸ்ரீபன் சுவேதா தம்பதியினரின் செல்வப் புதல்வர்களான
றினுஜன் (துசான்)
ஜதுசன் (ஜது)
தங்களின் 10,09 ஆவது பிறந்த தினத்தை இன்று 31. 03.2010 தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.
இவர்கள் சகல நலன்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.
(958)
ஸ்ரீலங்கா வீதி,
உடுவில், சுன்னாகம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா,
மாமன்மார், மாமிமார் மற்றும் பாட்டி


# வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவு பெறும்

## 88 வீத அட்டைகள் விநியோகிக்க எதிர்பார்ப்பு

(கொழும்பு)

விநியோகப் பணிகளில் 8ஆயிரம் தபால் ஊழியர்கள் இன்று 31 ஆம் திகதி வரையில் 88 வீதமான அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதோடு வாக்களர் அட்டை கிடைக்காதோர் ஏப்ரல் 7 ஆம் திகதி வரை அருகிலுள்ள தபால் நிலையங்களில் இருந்து தமது அட்டைகளை பெற முடியும் என பிரதித் தபால் மா அதிபர் ஆர்.டி ஜி. காமினி தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் சீராக முன்னெடுக்கப்படுவதாகவும் விடுமுறை தினமான ஞாயிறு, திங்கள் கிழமைகளில் விசேட விநியோகம் இடம்பெற்றதாகவும் தபால் திணைக்களம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் வரை 55 வீதத்திற்கும் அதிகமான வாக்களர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டதாக பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்தார். வாக்களர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளுக்கென 8ஆயிரம் தபால் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராவும் எதுவித அசம்பாவிதங்களுமின்றி வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுவதாகக் கூறி அவர் இன்றுடன் வாக்களர் அட்டை விநியோகப்பணிகள் நிறைவடைய உள்ளன எனக் குறிப்பிட்டார். (ஓ-4)


புதிய மெருகுடன்
இசைக்கொலுவேறிட..
புகழ்பெற்ற கலைஞர்களின் கைவண்ணத்தில்
யாழ்
சப்தஸ்வரா
இசைக்குழு
உங்கள் விழாக்களை மெருகேற்ற அழைத்து மகிழுங்கள்..
0774108051
0776980573 / 0213216621

# செயற்கை முறையில் கடல் விரால் வளர்ப்பு

(சென்னை)

செயற்கை முறையில் கடல் விரால் மீன்களை வளர்த்து இந்திய மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலையம் சாதனை படைத்துள்ளது.

கோபியா என்று அழைக்கப்படும் கடல் விரால் மீன்களுக்கு உலகு அளவில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதிக சத்து நிறைந்த இந்த மீன்களை வெளிநாட்டினர் போட்டி போட்டு வாங்குகிறார்கள். நாடுகளில் இந்த மீன்வளர்பு இலாபம் மிகுந்த தொழிலாக இருந்து வருகிறது.

கடல் விரால் மீன்கள் வெப்ப பிரதேச நாடுகளில் அதிகளவில் காணப்படுகிறது. ஆண் மீனைவிட பெண் மீண் மிக வேகமாக வளரும். அதிகபட்சமாக 60 கிலோ வரை வளரக்கூடியது. மற்ற மீன்களை போல இதனை எளிதில் பிடித்து விட முடியாது.

இராமேஸ்வரம் மண்டபத்தில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் கடல் விரால் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து செயற்கை முறையில் வளர்ப்பது குறித்து கடந்த 2 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வந்தது. இந்த நிலையில் அதற்கு பலன் கிடைத்துள்ளது. கடலில் மிதவை கூடுகளில் சினை மீன்களுக்கு தகுந்த உணவு கொடுத்து மீன் பொறிபகத்தில் மீன் குஞ்சுகளை பொறிக்க செய்து வெற்றி கண்டுள்ளது.

மிதவை கூடுகளில் வளர்க்க செலவு குறைவு. கூடுகளில் வளரும் சினை மீன்கள் 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை முட்டைகள் இடும். மிதவை கூடுகளில் வளரும் மீன்குஞ்சுகள் ஒரு ஆண்டில் 3 கிலோ முதல் 4 கிலோ வரையும் இரண்டு வருடத்தில் 8 முதல் 10 கிலோ வரையும் வளரும். இந்த மீன்களுக்கு செயற்கை முறையில் மிதக்கும் தன்மையுடைய உணவுகளை கொடுக்கிறார்கள். மீன் குஞ்சுகள் வளர வளர பெரிய கூடுகளுக்கு மாற்றப்படுகின்றன.

அமெரிக்கா , தைவான் ,சீனா உள்ளிட்ட நாடுகளில் இது போன்று கூடு முறையில் கடல் விரால்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது மண்டபம் மீன் வள ஆராய்ச்சி நிலையம் முதல் முறையாக கடல் விரால்களை செயற்கை முறையில் வளர்த்து சாதனை படைத்துள்ளதாக சென்னை ராஜா அண்ணாமலைப் புரத்தில் உள்ள மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிலைய தலைமை விஞ்ஞானி ஜி.மோகன்ராஜ் தெரிவித்துள்ளார். (2-4)

# ஈழ அகதிகள் தமிழ் நாடு வரத்தடை கடல் வழி வந்தால் கைதாவார்கள்

## இந்திய கடலோர காவற்படை எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்காப்படையினருக்கும் இடையிலான போர் முடிவடைந்துவிட்டதால் இலங்கை தமிழர்கள் எவரும் அகதிகள் என்ற போர்வையில் கடல்வழியாக தமிழ்நாட்டிற்குள் வரக்கூடாது என்று இந்திய கடலோரக் காவல்படை தடை விதித்துள்ளது.

அவ்வாறு எவரேனும் வந்தால் கைது செய்யப்பட்டு கடலோர பாதுகாப்பு சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட் டிருக்கிறது. இலங்கையில் படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி இதுவரை இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாடு சென்றுள்ளனர்.

இது தொடர்பாக இந்திய கடலோரக் காவல் படை தளபதி சைனி ஊடகமொன்றிற்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவுக்கு பல்வேறு நாடுகளிலிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. மும்பை பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து கடல்வழியாக இந்தியாவிற்குள் தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குதல் நடத்தும் ஆபத்து உள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் அகதிகள் என்ற போர்வையிலோ அல்லது மீனவர்கள் என்ற போர்வையிலோ இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைவது நல்லதல்ல. எனவே தான், கடலோரப் பாதுகாப்புச்சட்டத்தை இந்த வாரம் முதல் மிகக் கடுமையாகச் செயல்படுத்த முடிவு செய்திருக்கிறோம்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மீனவர்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்காமலேயே கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கின்றனர். இது கட்டுப்படுத்தப்படும்.

அது மட்டுமன்றி இலங்கை தமிழர்கள் இந்தியாவிற்குள் அகதிகளாக வர தடைவிதிக்கப்பட்டிப்பதைப் போலவே ஏற்கெனவே அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள் மீண்டும் இலங்கைக்கு செல்லவும் அனுமதிக்க முடியாது.


மன்னார் வளைகுடா, ஆதம்பாலம் ஆகிய பகுதிகளின் வழியாகத்தான் அகதிகளை மீனவர்கள் அழைத்துச் செல்கின்றனர். எனவே இந்தப் பாதைகளில் 24 மணி நேரம் கண்காணிப்பை வலுப்படுத்த தீர்மானித்துள்ளோம் என்றார்.

கடலோரக் காவல்படையின் இத்தகைய கட்டுப்பாடுகள் ஈழத்தமிழ் மக்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தமிழ் உணர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போர் முடிவடைந்து விட்டதாலேயே அங்குள்ள தமிழர்களுக்கு ஆபத்து விலகிவிட்டது என்று பொருளல்ல. உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது ஈழத்தமிழ் மக்கள் தமிழ்நாட்டிற்கு தப்பி வருவதைத் தவிர வேறு வழியில்லை.


ஆனால் ஈழத்தமிழ் மக்கள் முறைப்படி அகதி உரிமை பெற்று இந்தியாவிற்கு வர வேண்டும் என்று கட்டுப்பாடு விதிப்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல. உயிருக்குப் பயந்து தமிழ்நாடு வரும் இலங்கை அகதிகளிடம் கடுமை காட்டக்கூடாது என்று தமிழ் உணர்வாளர்கள் தமிழ் நாடு அரசுக்கும் மத்திய அரசுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-4)

# பாரதச் செய்திகள்



# ஐதராபாத்தில் மீண்டும் கலவரம்! ஆயிரம் இராணுவவீரர்கள் களத்தில்

(ஐதராபாத்)



தெற்கு ஐதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்த ஒரு மதத் திருவிழாவின் போது இரு தரப்பினருக்கு இடையே முஸரம் பக் உசைனி ஆலம் ஆகிய பகுதிகளில் கலவரம் ஏற்பட்டது.

இதையடுத்து பழைய ஐதராபாத் நகரில் உள்ள பகுதிகளில்144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தடை உத்தரவையும் மீறி நேற்று தெற்கு ஐதராபாத் நகரின் முக்கிய பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்தது.

இதைத் தொடர்ந்து அதிரடி படையினரும் மாநில பொலிசாரும் மூசா போவிலி, உசைனி ஆலம், புரனாபுல், பேகம் பஜார் ஆகிய பகுதிகளில் குவிக்கப்பட்டனர்.

மேலும் தெற்கு ஐதராபாத் நகரம் முழுவதும் பதற்றம் நிலவி வருவதால் கலவரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் நேற்றிரவு அப்பகுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. நகரின் பல பகுதிகளில் கலவரம் நீடித்து வருவதால் அதை அடக்குவதற்கு 10 கம்பனி (ஆயிரம் வீரர்கள்) துணை இராணுவப் படையை இந்திய மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது. (2-4)

# இந்திய தேசிய ஆலோசனைக்குழுவின் தலைவராக மீண்டும் சோனியா நியமனம்



தேசிய ஆலோசனை குழு ,தலைவராக காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவி மத்திய அமைச்சர் பதவிக்கு இணையானது.

ஆதாயம் தரும் பதவி என்று சர்ச்சை எழுந்ததால் கடந்த 4ஆண்டுகளுக்கு முன் இந்தப் பதவியை சோனியா இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தவும் திட்டப்பணிகளை ஆய்வு செய்யவும் கடந்த 2004 ஆம் ஆண்டு தேசிய ஆலோசனைக்குழு உருவாக்கப்பட்டது.

இக் குழுவின் தலைவர் பொறுப்பை காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா ஏற்றார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மற்றொரு பதவியில் இருப்பதற்கு எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இதனால் தேசிய ஆலோசகர் குழுத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறந்தார்.

இதற்கிடையில் காங்கிரஸ் கட்சி மீண்டும் மத்தியில் ஆட்சி அமைத்ததும் தேசிய ஆலோசனைக் குழுவை உருவாக்க முடிவு செய்தது. ஆனால் அப்பதவியை ஏற்க அவர் தயக்கம் காட்டினார்.

எனினும் இக்குழு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை காங்கிரஸ் மூத்த தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இதையடுத்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்திய சோனியா தேசிய ஆலோசனைக் குழுவின் தலைவர் பதவியை ஏற்க சம்மதம் தெரிவித்தார். (2-4)

# 60 வயது பெண்ணுக்கு நவீன மூட்டு அறுவை சிகிச்சை



(சென்னை)

சென்னையை சேர்ந்தவர் சுனிதா (60) பேராசிரியராக உள்ளார். இவர் முழங்கால் வலியால் அவதிப்பட்டு வந்தார். இந்நிலையில் போர்டிஸ் மலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வெற்றிகரமாக எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.


இது குறித்து டாக்டர் நந்தகுமார் சுந்தரம் கூறுகையில்,

காப்லேஷன் அந்த்ரோஸ்கோபிக் சேர்ஜிரி என்பது நோயாளிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத நுணுக்கமான சிகிச்சை முறை. குறைவான வலி, குறைவான இரத்தக் கசிவுடன் சிகிச்சை அளிக்கலாம்.

2 ஆவது நாளில் இருந்தே முன்னேற்றத்தை காண முடிகிறது. சென்னையில் முதல் முறையாக இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றார்.

மருத்துவமனையின் ஃபெசிலிடி இயக்குனர் டாக்டர் விவேக் டாலாலிகர் கூறுகையில்,

உலகத்தரமான மருத்துவ வசதிகளை நோயாளிக்கு அளிக்கும் வகையில் மருத்துவ கட்டமைப்புகளை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என்தில் ஃபோர்டிஸ் நம்பிக்கை கொண்டுள்ளது என்றார். (ஓ-4)



பழனி பங்குனி உத்திர திருவிழாவையொட்டி நடந்த தேரோட்டத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

# ஒற்றை ஆட்சி என்ற முடிபில் இருந்து நிரந்தர தீர்வு காணமுடியாது

**23.01.2008 அன்று இடைக்கால அறிக்கை கையளிப்பு நிகழ்வில் வீ.ஆனந்தசங்கரி காட்டமான உரை**



மேதகு ஜனாதிபதி, கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி தலைவர் கள் அனைவருக்கும் வணக்கம்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண அவர்கள் குழுவின் இடைக் கால அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக் கும் வைபவத்தில் நான் கலந்து கொள்வது உங்கள் அனைவருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம். இந்த நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்தின ருக்கும் பிறநாடு களில் வாழும் இலங்கையர்களுக்கும் நான் ஏன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை, இறுதி தீர்வுக்கு முன்பு, முன் னோடி யாக இருந்து முற்றாக அமுல்படுத்துவதற்கு ஆதரவு வழங்கு கிறேன் என்பதை விளக்க கடமைப்பட்டுள்ளேன். நாம் தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களுக்காக ஒன்றிணைந்து செயல்படும் கட்சியாகிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழக தலைவர் திரு. த.சித்தார்த்தன் சார்பிலும் , பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு .தி.ஸ்ரீத ரன் சார்பிலும் பேச கடமைப்பட்டுள்ளேன்.

நாம் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை சிலருக்கு சமஷ்டி என்ற வார்த்தை கசப்பாக இருப் பதால் சமஷ்டிக்கு மாறாக இந்திய முறையிலான தீர்வை வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த விடயத்திலும் வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்திலும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. வன் முறையை வெறுத்து ஒதுக்கி தள்ளுகின்ற நாம் சாத்வீக முறையிலும், நட்பு முறையிலும் ஒற்றையாட்சியின் கீழ் நிரந்தர தீர்வை காணமுடியாது என்ற கருத்தை எமது நாட்டு மக் களை ஏற்க வைப்போம்.

நாடு பிரியும் என்று அச்சப்படுவோ ருக்கு அவர்களின் அச்சத்தை போக்கு வோம். நாட்டுப் பிரிவினை எண்ணத்தை எமது மக்கள் சிந்தனையில் இருந்து நீக்கி ஐக்கிய இலங்கை கொள்கையை வலுவாக ஆத ரிக்க வைப்போம். இதை நாம் அடைய நாட்டின் ஒரு பகுதியினர் பெரியவர்கள் என்றோ, சிறிய வர்கள் என்றோ முன்னிலைப் படுத்தாது அரசும் ஊடகங்களும் அத்தகைய எண்ணத்தை வளர விடாது தடுத்தல் வேண்டும்.

இன்று நாம் கலந்து கொள்ளும் சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த ஒன்று கூடும் இச் சபை, இரத்தத்தில் தோய்ந்திருக் கும் நாட்டையும் அரை நூற்றா ண்டுக்கு மேல் விசேடமாக கடந்த 25 ஆண்டு காலமாக சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வரும் மக்க ளின் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய அரசியல் நிர்ணயசபையின் முன்னேடி யாக இதை கருதுகிறோம்.

சிங்கள , தமிழ் , இஸ்லாமிய , மலாய, பறங்கிய மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகத்தவர்கள் அனைவரும் சகல விதத் திலும் ஒருவர் பெரிது, மற்றவர் சிறிது என்ற பாகுபாடின்றி சமமாக வாழக்கூடிய ஒரு தேசம் மறுபிறவி எடுக்கும் போது தமிழ் பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பை காட்டுவதற்கு நாம் ஒன்று கூடி இருக் கின்றோம்.

ஒரு குழுவுக்கு மட்டும் தான் இந்த நாடு சொந் தமானது என உரிமை கொண்டாடுவதை நாம் மறுக்கிறோம். இந்தியாவில் இருந்து இலங் கையை 22 மைல் தூரம் கொண்ட பாக்குத் தொடுவாய் பிரிக்கின்றது. தொடுவாய்க்கு அப் பால் வாழும் 6 கோடிமக்கள், எமது மக்களுக்கு அமைதியும், இயல்பு வாழ்வும், நல்ல எதிர்கால மும் அமைய தமது வாழ்த்துக்களையும் ஒத் துழைப்பையும் வழங்க வேண்டும் என கேட் டுக்கொள்கிறோம். இருபக்கத்திலும் உள்ள விடு தலைப்புலிகள் சார்பான தலைவர்களால் தமிழ் நாட்டு மக்கள் தப்பாக வழி நடத்தப்படக்கூடாது. கடலுக்கு அப்பால் வாழ்கின்ற தமிழ் மக்க ளுக்கு நம் நாட்டுத்தமிழர்களை இனப்படு கொலை செய்ய எவரும் முயற்சிக்கவில்லை என்பதையும் தமிழ் மக்களின் அரைவாசிப் பேருக்கு மேல் தமது பூர்வீக குடியிருப்புக்களை யும் விட்டு வெகுதூரத்திற்கு .அப்பால் தென்னி லங்கையில் சிங்கள , முஸ்லிம் மக்களுடன் அவர்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து சந் தோசமாக வாழ்கின்றார்கள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

கடந்த 20 ஆண்டு காலமாக மீண்டும் பேச்சு வார்த்தைக்கு திரும்புவதற்கு பல சந்தர்ப்பங் கள் விடுதலைப்புலிகளுக்கு அளிக்கப்பட்டன. வடகிழக்கை நிர்வகிப்பதில் பெரும் பங்கினை அரசிடம் இருந்து பெற்றுத்தருவேன் என விடு தலைப்புலிகளுக்கு பல தடவை கூறியிருக்கி றேன். தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் பொது மன்னிப்பு பெற்றுத்தருவதாகக்கூட கூறி யிருக்கிறேன். எனது கோரிக்கையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக தினமும் இரு பகுதியினர் மத்தியிலும் உயிர் பலிகளை மட்டு மே எடுத்துவருகின்றனர். எனது வேண்டுகோள் இன்று வரை நீடிக்கிறது. எமது மக்களை பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வைப்பது மட்டுமன்றி அரசியலில் எதுவித அக்கறையு மின்றி தாமுண்டு தமதுவேலை உண்டு என ஒதுங்கி வாழும் அப்பாவி சிங்கள கிராம வாசி களை விடுதலைப்புலிகள் மீண்டும் படுகொலை செய்வது வருத்ததிற்குரியதாகும். எமது மக்கள் அதாவது இலங்கை மக்கள் போதியளவு துன் பப்பட்டும் பெருமளவு இழந்தும் தொடர்ந்தும் நிரந்தர பயத்துடனும் , பதற்றத்துடனும் வாழ் கின்றார்கள். இவற்றில் இருந்து அவர்கள் விடுபட வேண்டும்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பணி தொடரும் எனவும் 13ஆவது திருத்தச் சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும் மேதகு ஜனா திபதி உறுதியளித்துள்ளார். தமிழ் மக்களுடைய அபிலாசைகளை தீர்க்கக்கூடிய வகையில் அரசியல் கட்சி பிரதிநிதிகள் அதே உற்சாகத் தோடு செயற்பட்டு நல்ல தீர்வை காண்பார்கள் என நம்புகிறோம். சமாதானத்தையும் அமைதி யையும் காண ஜனாதிபதி எடுக்கும் முயற்சிக்கு எமது பூரண ஆதரவு உண்டு.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

(கி-4879)

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1 X

# சகல ஊடகவியலாளரும் சமமான அந்தஸ்துடன் நோக்கப்பட வேண்டும்

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களை சந்திப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

சகல ஊடகவியலாளர்களுக்கும் சம அந்தஸ்திலான சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதே இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கம் என்றும் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தகவல் தருகையில்,

நாட்டில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் கடமையாற்றுகின்ற நிலையில் ஆங்கிலமொழி மூல ஊடகவியலாளர்கள் பெறுகின்ற சம்பளத் தொகையை விட தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்கள் மிகவும் குறைந்தளவிலான சம்பளத்தையே பெறுகின்றனர். இது நியாயமானதாகப்படவில்லை.

இதனைக் கருத்திற் கொண்டே சகல ஊடகவியலாளர்களும் சம அந்தஸ்துடன் நோக்கப்பட வேண்டுமென்பதும் அவர்களுக்கு பாகுபாடற்ற விதத்தில் ஊதியத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதும் முன்னணியின் நோக்கமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை எட்டுவதற்காகவே ஊடக நிறுவனங்களின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். இதற்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# அம்பாந்தோட்டையில் சீனா துறைமுகம் கட்டுவதால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் அம்பாந்தோட்டை பகுதியில் சீனா துறைமுகத்தை கட்டுவதால் இந்தியாவுக்கு எந்த பாதிப்பும் இல்லை என இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய கடற்படையின் தென்பிராந்திய கட்டளை தளபதி வைஸ் அட்மிரல் கே. என். சுன்சில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் அம்பாந்தோட்டை பகுதியில் சீனா துறைமுகத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பில்லை. சீனாவின் இந்த நடவடிக்கை தொடர்பில் நாம் கவனம் செலுத்தத் தேவையில்லை.

ஆனால் துறைமுகப் பணிகள் நிறைவடைந்த பின்னரும் சீனா அங்கு நிலை கொண்டுள்ளதா என்பதை தான் நாம் அவதானிக்க வேண்டும் என்றார்.

இந்திய கடற்படையில் மூன்று அதிவேக தாக்குதல் படகுகளை இணைக்கும் விழாவில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனிடையே அம்பாந்தோட்டை பகுதியில் சீனா அமைத்துவரும் துறைமுகம் 2020 ஆம் ஆண்டு 33 பாரிய கப்பல்களை ஒரே தடவையில் உள்வாங்கிக் கொள்ளும் தகைமை உடையதாக இருக்கும் என ஊடகத் தகவல்கள் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (2-4)

# வெப்பத்தை தணிக்கும் வத்தகப் பழங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதிகளில் வீதியோரங்களில் வெப்பத்தைத் தணிக்கும் வத்தகப் பழங்கள் தென்னிலங்கை வியாபாரிகளால் தொகையாக விற்கப்படுகின்றன.

ஆரியகுளத்தை அண்டிய பகுதியிலேயே இவை பெருமளவில் விற்பனையாகின்றன. தற்போது நிலவும் வெப்பத்தின் சூட்டைத் தணிக்க வல்ல இப்பழங்கள் பலவித வடிவங்களில் வெட்டி வைக்கப்பட்டுள்ளன.

மிகக்கு குறைந்த விலையில் கிடைக்கும் இக் கனிகள் உடல் சூட்டுக்கு அரிய மருந்தாகும்.

இதேபோன்று கொய்யாக் கனிகளும் பெருந் தொகையாக விற்கப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது. (2)

# உளவளம் குன்றியவர்களுக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம்

## கொழும்பு ஊடகம் செய்தி

(கொழும்பு)

இலங்கையில் உளவளம் குன்றியவர்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அங்கொடை மற்றும் முல்லேரியா ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் 750 உள வளம் குன்றிய நபர்களுக்கு அடுத்த ஆண்டு வாக்களிப்பில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

அடுத்த வருடம் முதல் உளவளம் குன்றிய நோயாளிகளும் தேர்தலில் பங்கெடுப்பார்கள் என தேசிய உள ஆரோக்கிய நிறுவகத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜெயான் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வாக்களிக்க தகுதி பெற்றவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## எருக்கு

Botanical Name- Calotropis gigantea
Family - Asclepiadaceae
Engl - Gigantic swallow wort
Sinh - Elawara

பெரிய நிமிர்ந்து வளரும் பெருஞ்செடி அல்லது சிறிய மரவகையைச் சார்ந்தது. 2.4 -3 மீற்றர் உயரமானது. இலைகள் எதிரிலை ஒழுங்கு. இலை அகலமானது. 10-20 செ.மீ நீளமும், 3.8 - 10 செ.மீ அகலமுடையது. வெள்ளை, நாவல் நிறங்களில் காணப்படும். 5 இதழ்களைக் கொண்டவை. உள்ளே சுரப்பி வடிவான அமைப்பு காணப்படும். அது நீள்வட்ட அகலமானதாகக் காணப்படும்.

பூவின் காம்பு பூவைவிட நீளம் கூடியதாகக் காணப்படும். பட்டை வெண்மை கலந்த மஞ்சள் நிறம். கட்டை உருளை வடிவானது. சிறிய மயிர் போன்ற அமைப்பு காணப்படும். மொட்டுக்கள் முட்டை வடிவானவை. விதைகள் ஏராளமானவை. 5 மி.மீ விட்டமானவை. முட்டை வடிவ தட்டையான விதைகள் கபிலநிறமானவை. 2.5 - 3.2 செ.மீ நீளமானவை.

**இனவிருத்தியும், பரம்பலும்**

எருக்கன் செடியை எங்கும் பரவலாகக் காணலாம். வெள்ளை நிறப்பூக்களைக் கொண்ட எருக்கன் செடி அரிதாக பரம்பிக் காணப்படும். ஒரு சில இடங்களில் எருக்கன் செடி கூட்டம் கூட்டமாகவும் ஒரு சில இடங்களில் ஒன்றிரண்டாகவும் வளர்ந்திருக்கும்.

இதன் காயினுள் மெல்லிய இழைகள் மினுமினுப்புடன் அடர்ந்திருக்கும். காய் முற்றி வெடித்தவுடன் இந்த இழைகள் பந்துபோல விரிந்து காற்றில் பறக்கும். ஒவ்வொரு இழைப் பந்தின் அடியிலும் ஒரு மெல்லிய விதை ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த இழைப்பந்து எருக்கன்செடி இனத்தை விருத்தி செய்ய பயன்படுகிறது.

**மருத்துவப் பயன்கள்**

எருக்கன் செடியின் இலை, கிளை, மொட்டு எதை ஒடித்தாலும் வெண்ணிறமான பால் வெளியேறும். பால் நச்சுத்தன்மையுடையது. எனவே நன்றாக கழுவி, வாடவைத்த பின்பே பயன்படுத்த வேண்டும்.

**காலில் குத்திய முள் வெளியேற :** காலில் குத்திய முள் உடைந்து உள்ளேயே தங்கி வேதனை கொடுத்தால் தினமும் அவ்விடத்தில் எருக்கன் பாலை விட்டு வந்தால் முள்தானே வெளியே வந்துவிடும்.

**வீக்கம் வாட:** எருக்கன் பழுப்பு இலைகளைக் கொண்டுவந்து அதை வேப்பெண்ணெயில் வதக்கி வீக்கமுள்ள இடத்தில் வைத்துக் கட்டி வந்தால் எந்தவகையான வீக்கமானாலும் வாடிவிடும்.



**குதிக்கால் வாதத்திற்கு :** குதிக்கால் வைக்கும் அளவிற்கு ஒரு செங்கல்லை தயார் செய்து அடுப்பில் போட்டு நன்றாக காய்ந்தவுடன் கல்லை எடுத்து, அதன்மேல் எருக்கன் பழுத்த இலைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைத்து குதிக்காலை அதன் மேல் அழுத்தி வைத்திருந்தால் கல்லிலுள்ள சூடு இலைக்கு ஏறி காலில் சூடு தாக்கும். தாங்க முடியாத அளவு சூடு தாக்கும் போது காலை எடுத்துவிட வேண்டும். இவ்விதமாக கல்லின் சூடு ஆறும்வரை காலை வைத்து எடுக்க வேண்டும்.

வெள்ளெருக்கன் வேருடன் சமபங்கு களிமண் சேர்த்து அரைத்து, அரையாப்பு கட்டிகளின் மேல் பூசினால் கட்டிகள் பழுத்து உடைந்து ஆறும்.

ஆஸ்துமா குணமாக வெள்ளெருக்கம் பூக்களை நன்றாக கழுவி நிழலில் உலர்த்தி இந்த எடைக்கு சமபங்கு திப்பிலி சேர்த்து மைபோல அரைத்து மிளகளவு குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி போத்தலில் பத்திரப்படுத்தவும். இழுப்பு ஏற்படும் சமயத்தில் ஒரு மாத்திரையை வெந்நீரில் கரைத்துக் குடித்தால் இழுப்பு நின்றுவிடும்.

அல்லது மேற்படி சேகரித்த வெள்ளெருக்கம் பூக்களுடன் சமஅளவு மிளகு சேர்த்து மைபோல அரைத்து மிளகளவு மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி 1-2 மாத்திரை அளவு வெந்நீரில் உரைத்துக் கொடுத்தாலும் ஆஸ்துமா தணியும்.

**எருக்கன் பால் எண்ணெய் :** எருக்கன் பால் அரைப் போத்தல், நல்லெண்ணெய் 1 போத்தல் அத்துடன் பிரண்டைச்சாறு, பருத்தி இலைச்சாறு ஒவ்வொன்றும் 250 மில்லி விட்டு நன்றாகக் கலந்து அடுப்பிலேற்றி காய்ச்ச வேண்டும். எண்ணெய் திரண்டுவரும் பதத்தில் வடித்து பத்திரப்படுத்திக் கொள்ளவும். இந்த எண்ணெயை உடம்பு முழுவதும் பூசி நன்கு பிடித்து விட்டால் பாரிசவாதம், வலி, கடுப்பு குணமாகும். வெந்நீரில் குளித்து, வெந்நீர் குடிக்க வேண்டும்.

**காதுக்குத்திற்கு :** எருக்கன் இலைகளை பழுத்ததாக சேகரித்து துவைத்து சாறு பிழிந்து அச்சாற்றிற்கு சமன் நல்லெண்ணெய் கலந்து வசம்பு, பெருங்காயம், இலவங்கம், வெள்ளைப்பூடு ஒரே அளவாக எடுத்து அம்மியில் வைத்து அரைத்து எண்ணெயுடன் கலக்கி காய்ச்சினால் எண்ணெய் மிதக்கும். இறக்கி பத்திரப்படுத்தி காதுவலி, காதால் சீழ் வடிதலுக்கு காதைச் சுற்றி பூசினால் வலி தணியும்.

**எருக்கன் பட்டைத் தைலம் :** இரண்டு பிடி எருக்கன் பட்டையைத் தட்டி சாறு எடுக்க வேண்டும். அத்துடன் ஒரு போத்தல் நல்லெண்ணெய் கலந்து அடுப்பேற்றி சாறு வற்றும் சமயம் இறக்கி ஆறவிட்டு உச்சந்தலையில் தேய்த்து இரண்டு மணித்தியாலங்கள் சென்றதும் தலை மூழ்கிவிர ஒற்றைத் தலைவலி தீரும்.

குறிப்பு :- எருக்கன் செடி இருக்கும் இடத்தில் நாகபாம்பு குடிகொள்ள சாத்தியமுண்டு.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

வீடுகளில் எருக்கன் செடி வளர்ப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.


வெள்ளெருக்கம் உலர்ந்த பூ 125, கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி ஒவ்வொன்றும் 5 கிராம் அளவு எடுத்து பன்னீர் விட்டரைத்து மிளகளவு மாத்திரை செய்து உட்கொண்டு பால் 1 ரம்ளர் அருந்திவர உடலில் நல்ல வீரியமுண்டாகும்.

வெள்ளெருக்கம் வேர்ப்பட்டையை சேகரித்து கழுவி உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு வளர்ந்தவர்கட்கு காலை, மாலை கொடுக்க தேள்கடி விடம் இறங்கும்.

மணற்பாங்கில் பயிரான முதிர்ந்த வெள்ளெருக்கம் வேரை, சித்திரை, வைகாசி மாதங்களில் சேகரித்து மேற்புறணியை நீக்கி பாலில் அவித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடி செய்து 65 மி.கி முதல் 325 மி.கி வரை தினம் ஒன்றிற்கு 2 தடவை கொடுக்க பெருநோயில் வரும், நீரிழிவு நோயில் வரும் ஆறாத புண்கள் ஆறும். இதை மேனாட்டு வைத்தியத்தில் Ipecae வேருக்கு பதிலாக பயன்படுத்துவதாக கூறப்படுகின்றது.

# இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் முறை

## ஓர் கண்ணோட்டம் 3



**வாக்களிப்பு:-**

வாக்களிப்பு தினத்தன்று காலை 7 மணிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஒவ்வொரு கட்சியினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகளும் வாக்குச் சாவடிகளில் பிரசன்னமாக இருக்க முடியும். இப் பிரதிநிதிகள் கட்சிச் செயலாளரது அல்லது சுயேட்சைக்குழுவின் முதன்மை வேட்பாளரது அதிகாரக் கடிதத்துடன் வருகை தந்தால் மட்டுமே சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரால் சாவடியில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

இவர்கள் முன்னிலையில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்குப் பெட்டியைத் திறந்து காண்பித்து அப்பெட்டியில் ஒன்றும் இல்லை என்பதை உறுதி செய்த பின் பெட்டியைப் பூட்டி பெட்டிக்கு சீல் வைப்பார். வேண்டும் எனில் கட்சி அல்லது சுயேட்சைக் குழு பிரதிநிதிகளும் தமது சீலை வைப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். வாக்காளர் வசதிகருதி ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஒவ்வொரு கட்சியினது அல்லது சுயேட்சைக் குழுவினது வேட்பாளரது பெயர்ப்பட்டியல்கள் அவர்களுக்கு உரித்தான எண் வரிசைப்படி காட்சிக்கு வைக்கப்படும்.

சரியாக காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகும். வாக்களிப்பவர்கள் வருகை தந்தவுடன் அவர்களது அடையாள அட்டையும் அவர்களது வாக்களாளரது அட்டவணையில் உள்ள பெயர்களும் சரி பார்த்து சரி என ஏற்றுக்கொண்ட பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் குறித்த நபருக்கு வாக்குச் சீட்டை வழங்குவார்.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம், பாஸ்போட், தேர்தல் அலுவலத்தால் வழங்கப்படும். தற்காலிக அடையாள அட்டையைக் கொண்டு செல்ல முடியும். அட்டவணையில் பெயரை இலகுவாகக் கண்டுபிடிப்பதற்கு உதவியாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட வாக்களிப்பு அட்டையைக் கொண்டுசெல்லல் வசதியாக அமையும். வாக்களர் அட்டை இல்லாவிட்டால் அட்டவணையில் பெயர் இருந்தால் வாக்குச் சீட்டுக்கொடுக்கப்படும். வாக்காளர் இடாப்பில் ஒருவரது பெயர் இல்லாவிட்டாலும் உரிய அடையாள அட்டை இல்லாவிட்டாலும் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்கப்பட மாட்டாது.

**வாக்களிக்கும் முறை:-**

வாக்குச்சீட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் இதற்கென ஒதுக்கப்பட்ட மறைவான இடத்திற்குச் சென்று முதலில் தாம் விரும்பிய கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழுவிற்கே அதன் எதிரே உள்ள சின்னத்திற்கு நேரே உள்ள கூட்டில் புள்ளடி இட வேண்டும். புள்ளடி இடப்பட்ட பின்னர் வாக்குச் சீட்டின் கீழ் 12 சதுரங்கள் காணப்படும். இச்சதுரங்கள் ஒன்றில் இருந்து 12 வரை இலக்கமிடப் பெற்றிருக்கும். எனவே நீங்கள் வாக்களிக்கப் போக முன்னர் நீங்கள் எக்கட்சிக்கு அல்லது எச் சுயேட்சைக்குழுவிற்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என்பதையும் அதன் சின்னம் என்ன என்பதையும் ஞாபகம் வைத்துக் கொண்டு செல்ல வேண்டும்.

அத்தோடு அக்கட்சியில் அல்லது சுயேட்சைக்குழுவில் எந்த வேட்பாளருக்கு நீங்கள் உங்களது விருப்பு வாக்கை அளிக்க விரும்புகின்றீர்களோ அவர்களுக்குரிய இலக்கத்தினையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். உங்களது விருப்பு வாக்கினை ஒருவருக்கோ அன்றி இருவருக்கோ அன்றி மூன்று பேருக்கு இடலாம்.

மூன்று பேருக்கு மேல் விருப்பு வாக்கு அளிக்க முடியாது. மூன்று பேருக்கு மேல் விருப்பு வாக்களித்தால் விருப்பு வாக்கு எண்ணுதலுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது கீழே கொடுக்கப்பட்ட உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

| கட்சியின் பெயர் | சின்னம் | |
|---|---|---|
| A | 💧 | |
| B | ✠ | |
| C | ✡ | ✕ |
| D | ⌖ | |
| E | ❄ | |
| F | ☜ | |
| G | 💣 | |
| H | ☺ | |
| I | ☼ | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ✕ | 2 | 3 | 4 | ✕ | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | ✕ | | | | | | | | |

தற்போதைய யாழ். தேர்தல் மாவட்டத்தில் 15 பதிவு செய்யப்பட்ட கட்சிகளும் 12 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. மேலே காட்டப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டில் 6 கட்சிகளின் பெயரும் மூன்று சுயேட்சைக் குழுக்களுமே காட்டப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து ஏனைய கட்சிகளது சுயேட்சைக் குழுக்களதும் பெயர்கள் குறிப்பிட்ட நீண்டதொரு (ஒரு அடி எட்டு அங்குலம் நீளமான) வாக்குச்சீட்டு வாக்காளருக்கு கொடுக்கப்படும். இதன் அடிப் பக்கத்தில் 12 சதுரம் கொண்ட பெட்டிகள் காணப்படும். உதாரணமாக நீங்கள் தமிழ் விடுதலைக்கூட்டணிக்கு உங்களது வாக்கை இட வேண்டுமெனில் உதயசூரியனுக்கு எதிரே உள்ள கூட்டில் புள்ளடி இடவேண்டும். மாதிரி 1 இல் காட்டப்படுகின்றது. பின்னர் அக்கட்சியில் உள்ள ஏதாவது மூவருக்கு விருப்பு வாக்களிக்க விரும்பினால் வாக்குச்சீட்டின் கீழே உள்ள சதுரங்களில் புள்ளடி இட வேண்டும். ஏற்கனவே தேர்தல் ஆணையாளரால் ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சைக்குழுவின் கீழ் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கும். உதாரணமாக தமிழ் விடுதலைக்கூட்டணியில் உள்ள வேட்பாளர்களுக்கு கீழ்க்கண்ட முறையில் இலக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

1. ஆனந்த சங்கரி வீரசிங்கம்
2. கோபிதாசன் சீவரத்தினம்
3. திருஞானசம்பந்தர் தம்பையா
4. பத்மநாதன் சுப்பையா
5. மகாலிங்கம் செல்லப்பா
6. முத்துலிங்கம் செல்லப்பா
7. முருகேசு அரியகுட்டி
8. இரத்தினமணி இராமையா
9. இராஜஇராஜேஸ்வரி சுப்பையாபிள்ளை.
10. சதாசிவ மூர்த்தி குமாரசாமி
11. சாந்தசொரூபன் இளையதம்பி
12. சண்முகராசா வல்லிபுரம்

நீங்கள் உங்களது வாக்கினை உதய சூரியனுக்கு இட்ட பின்னர் அக்கட்சியில் உள்ள மகாலிங்கத்திற்கு உங்களது விருப்பு வாக்கினை இடவேண்டுமானால் மாதிரி ஒன்றில் காட்டப்பட்டவாறு இலக்கம் 5 இன் மேல் புள்ளடி இட வேண்டும். ஆனந்தசங்கரிக்கு உமது விருப்பு வாக்கை இடவேண்டுமானால் அவருக்குரிய மாதிரியில் காட்டப்பட்டவாறு இலக்கம் 1 இக்கு புள்ளடி இடவேண்டும். இராஜஇராஜேஸ்வரிக்கு உங்களது விருப்பு வாக்கை இட வேண்டும் எனில் அவருக்குரிய இலக்கம் 9 இற்கு புள்ளடி இட வேண்டும். மூன்றுக்கு மேல் விருப்பு வாக்கு இடப்படுமானால் அது விருப்பு வாக்கு எண்ணுவதற்கு சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

மேலே கூறப்பட்டவாறு வாக்காளரினால் வாக்குகள் அளிக்கப்பட்டுவரும்பொழுது ஏதோ காரணத்தினால் ஒருவருடைய வாக்கை யாராவது போட்டிருந்தால் குறிப்பிட்ட நபருக்கு வாக்குச்சீட்டு வழங்கப்படமாட்டாது. எனினும் இவருக்கு வேறு நிறத்திலான கேட்டுப் பெறும் வாக்குசீட்டு ஒன்று வழங்கப்படும். இதில் அவ்வாக்காளர் வாக்களிக்க முடியும். இக் கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டு வாக்கு எண்ணிக்கையின் போது சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. ஆனால் தேர்தல் முறைகேடு நடைபெற்றது என விசாரணைகள் நடைபெறும் பொழுது இவை கவனத்தில் கொள்ளப்படும்.

இவ்வாறு மாலை 4 மணி வரை வாக்களிப்பு நடைபெற்றதும் எல்லோர் முன்னிலையிலும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரால் வாக்குப்பெட்டியின் வாக்கிடும் துவாரத்தை கடதாசியால் ஒட்டி மறைத்து சீல் வைப்பார். பின்னர் இப் பெட்டி அதற்குரிய கடதாசியால் சுற்றப்பட்டு நூலினால் கட்டப்படும். இதன் பின்னரும் சீல் வைக்கப்படும். வேண்டுமானால் கட்சி அல்லது சுயேட்சைக்குழு முகவர்களும் தமது சீலினை இடமுடியும்.

வாக்களிப்பு ஆரம்பமாகி முடியும் வரை நடைபெற்ற விடயங்களை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தமக்கு வழங்கப்பட்ட பதிவேடுகளில் அவற்றைப் பதிந்து கொள்ள வேண்டும். இதன் பின்னர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரும் வேண்டும் எனில் மற்றைய தலைமை தாங்கும் அலுவலரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் தமக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் மூலம் வாக்குப்பெட்டிகள், மிகுதி வாக்குச்சீட்டுகள், பதிவேடுகள் என்பனவற்றை கொண்டு சென்று வாக்கு எண்ணும் நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும் எனில் முகவர்களும் பெட்டிகள் ஒப்படைக்கும்வரை அவர்களுடன் பின் தொடர்ந்து செல்ல முடியும்.

செ.மகாலிங்கம் B.A(Hons)M.A
முன்னாள் திட்டப்பணிப்பாளர்,
திட்டமிடல் பணிப்பாளர்,
யாழ்.செயலகம்.

(தொடரும்)

# சுவிஸில் ஈழத்தமிழரவைக்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

சுவிஸ் தழுவிய ரீதியில் நடைபெற்ற ஈழத் தமிழரவைக்கான தேர்தல் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியுடன் முடிவடைந்துள்ளது. சுவிஸின் 17 மாநிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்வாக்கெடுப்பில் கணிசமான மக்கள் கலந்து கொண்டு சுவிஸ் ஈழத்தமிழரவைக்கான தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஈழத்தமிழரவைக்கான தேர்தலில் தெரியப்பட்டுள்ள 30 பிரதிநிதிகளில் 14 இளைய தலைமுறையினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் 6 பெண் பிரதிநிதிகளும் அடங்குவர். அத்துடன் தமிழர் அல்லாத இரு சுவிஸ்நாட்டு பிரஜைகளும் இத்தேர்தலில் பங்கு பற்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஈழத் தமிழர வைக்கான போட்டியில் சுவிஸ்நாடு பூராவும் 41 வேட்பாளர்கள் பங்கு பற்றி இருந்தனர்.

இத்தேர்தலின் பின்னணியில் சுவிஸின் பிரதான கட்சிகளின் பிரமுகர்கள் தம்மை இணைத்துக்கொண்டதுடன் சிலர் வாக்குச் சாவடிகளை பார்வையிட்டு தமது கருத்துக்களையும் பகிர்ந்துள்ளனர். அந்த வகையில் சுதந்திர ஜனநாயக கட்சியின் சூரிச் மாநகரசபை உறுப்பினர் ஊர்ஸ் எக்கர் தேர்தல் நடைமுறைசார்ந்து குறிப்பிடுகையில், இவ் வாக்கெடுப்பானது நேர்த்தியான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதையிட்டு தனது வாழ்த்துக்களையும் எதிர்காலத்தில் தமிழர்களின் இந்த முயற்சி ஆரோக்கியமான திசையில் செல்லும் எனவும் கூறி இருந்தார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியும் சுவிஸ் தேர்தல் காண்காணிப்பாளர்களின் பூரண கவனிப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதன் ஊடாக தேர்தல் ஒழுங்குமுறை களுக்கு இசைவாக, அமைவாக நடை முறைப் படுத்தப் பட்டுள்ளது. தேர்தல் கண்காணிப்பாளர் களின் அறிக்கைகளும் தேர்தல் நடைமுறை களின் சீரான ஒழுங்கமைப்பு சார்ந்து வாழ்த்துரைத் துள்ளனர்.

சுவிஸில் தமிழர்களின் அரசியல், பொருளாதார, கலாசாரம் மற்றும் சமூக வியல் இணைவாக்கத்திற்கு ஈழத்தமிழரவையின் உதயம் நல்லதொரு அத்திவாரம் என கருதப்படுகின்றது.

எதிர்காலத்தில் சுவிஸில் தமி ழர்களின் ஜனநாயக குரலாக ஒலிக்கவுள்ள ஈழத்தமிழரவையானது இச்செயற்றிட்டத்தின் ஊடாக சுவிஸின் சகல மட்டங்களிலும் செய லாற்ற முடியும் என்பது திண்ணம்.

மிக விரைவில் சுவிஸ் ஈழத் தமிழ ரவையின் முதலாவது அமர்வு சார்ந்த தகவல் வெளியாகும் என்பதை இத்தருணம் அறியத் தருகின்றோம். (ஓ-4)

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் செய்திகளில் உண்மையில்லை

## இலங்கைக் கடற்படை தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது கடற்படை அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் ஒரு போதும் தாக்குதல்கள் நடத்தவில்லை எனவும் கடற்படை பேச்சாளர் கேப்டன் அத்துல சேனாரட்ன தெரிவித்துள்ளார். கச்சதீவு பிரதேசத்தில் சில தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்திய மீனவர்களினால் பிடிக்கப்பட்ட மீன்களையும் இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியதாக குற்றம் சுமத்தப்படுகிறது. (2-4)

## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

தென்பகுதி சுற்றுலாப்பயணிகளின் வருகை கடந்த வாரங்களில் அதிகரித் துக் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. கடந்த இருநாள் விடுமுறையைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)




## பெறுபேறுகள் வெளிவந்துள்ளன

வண்ணை -சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் அண் மையில் நடத்திய சைவ சமய அறிவுப்பரீட்சை, நீதிநூல் மனனப் போட்டி, கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுபேறுகள் பரீட்சார்த்திகள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாதோர் நாளை வியாழக்கிழமை சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம், இலக்கம் 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு சைவ சமய அபி விருத்திக் கழகப் பரீட்சை செயலர் சு. ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)






வடபிராந்தியத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண அபிவிருத்தி கடன் திட்டம், வடக்கின் வசந்தம் திட்டம் என்பவற்றின் கீழ் யாழ் மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளினால் ஒன்றிணைக்கப்பட்ட கடன் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் வங்கி பிரதிநிதிகள் அழைத்துவரப்படுவதையும், பிரதிநிதிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும் ஆளுநர் மற்றும் இலங்கை வங்கி பொதுமுகாமையாளர் ஜி.டி. வீரசேன ஆகியோர் உரையாற்றுவதையும் இலகு கடன்திட்ட அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வாகனங்கள், இயந்திரங்கள் என்பவற்றை ஆளுநர் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

### இலங்கை அரசின் ஆதரவுடன்

# ஐ.நா.வின் பாதுகாப்பு சபையில் உறுப்பினராக இந்தியா திட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக இந்தியா முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில்மேலும் தெரியவருவதாவது,

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக இணைந்து கொள்வதற்கு இந்தியா கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்திய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசும் முழுமையான ஆதரவுகளை வழங்கி வருகின்றது.

பாதுகாப்பு சபையில் உறுப்பினராக வருவதற்காக கடந்த 3 வருடங்களாக இந்தியா கடும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராகும் போட்டியில் இருந்து இந்த வருட ஆரம்பத்தில் கசகஸ்தான் வெளியேறியது இந்தியாவுக்கு அனுகூலமானது என கருதப்படுகின்றது.

பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினராக வருவதே இந்தியாவின் முதன்மையான நோக்கம் என பாதுகாப்பு சபை உறுப்பினருக்கான இந்தியாவின் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

இலங்கை, பங்களாதேசம், நேபாளம், ஆப்கானிஸ்தான், ஆகிய நாடுகள் உட்பட 19 நாடுகள் தமக்கு ஆதரவுகளை வழங்கவுள்ளதாகவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இந்தியா உறுப்பினராக தெரிவுசெய்யப்படும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் பாதுகாப்புச்சபை 15 உறுப்பு நாடுகளை கொண்டது. அவற்றில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்புரிமை கொண்டவை. அவர்களுக்கு வீட்டோ அதிகாரமும் உள்ளது. ஏனைய 10 நாடுகள் தற்காலிக உறுப்புரிமை கொண்டவை. அவர்கள் இரண்டு வருடம் பதவி வகிப்பார்கள்.

தற்காலிக உறுப்பினராக இந்தியா தெரிவு செய்யப்பட வேண்டுமானால் அது ஐ. நாவின் பொதுச்சபையின் வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறவேண்டும். அதாவது 128 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

கசகஸ்தான் வெளியேறுவதற்கு முன்னர் இந்தியா 122 வாக்குகளை தனக்கு அனுகூலமாக கொண்டிருந்தது.

ஆனால் தற்போது கசகஸ்தான் வெளியேறியுள்ள நிலையில் ஆசியாவில் இருந்து இந்தியா மட்டுமே போட்டியிடுவதால் அது மேலும் ஆதரவுகளை பெறலாம் என நம்பப்படுகின்றது.

இறுதியாக 1992 ஆம் ஆண்டு இந்தியா தற்காலிக உறுப்புரிமையை பாதுகாப்புச் சபையில் கொண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## மின்னல் தாக்கங்கள் குறித்து எச்சரிக்கை

மின்னல் தாக்கங்கள் குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது. மின்னல் தாக்கங்களினால் நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்றுவரும் அனர்த்தங்களை அடுத்தே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. (2-3)

## கிராமப் பகுதி நோயாளர் மருத்துவ பரிசோதனை

கிராமப்புற பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை துரிதமாக வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் கிராமப்புற மக்கள் தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக செலவாகும் பணத்தை மீதப்படுத்த முடியுமென சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (2-3)

# சுவரொட்டிகள் அகற்றும் பணிக்கு பணம் வழங்கப்படக்கூடாது

### மாத்தளை துணைத் தேர்தல் ஆணையாளர்

சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றும் பணிகளுக்காக பணம் வழங்கப்படக் கூடாது என மாத்தளை மாவட்ட துணைத் தேர்தல் ஆணையாளர் திலீப் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மாத்தளை மாவட்ட பொலிஸாருக்கு நிதி வழங்கக்கூடாது என துணை தேர்தல் ஆணையாளர், தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூல கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றும் பணிகளை அவர்கள் உரிய முறையில் மேற்கொள்ளவில்லை என்றும் தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)



இடை நிலைக்கல்வி நவீன மயப்படுத்தல் திட்டம் IIஇல் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பாடசாலை (II,1C ,1AB) அபிவிருத்தி நிதியாக ஒவ்வொரு பாடசலைக்கும் ஒரு இலட்சம் ரூபா நிதி வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண திட்டப் பணிப்பாளர் வி.மகேந்திரன், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

## ஊடகவியலாளரும் தமது சொத்து விபரங்களை வெளியிடுவது வெளிப்படைத் தன்மைக்கு சிறந்தது

## திஸ்ஸ அத்தநாயக்க கருத்து

ஊடகவியலாளர்கள் மக்கள் மத்தியில் யில் பிரபல்யமானவர்கள். அவர்கள் தங்களுடைய சொத்து விபரங்களை வெளிப்படுத்துவது அவர்களின் வெளிப்படைத் தன்மைக்கு சிறந்தது என ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மக்கள் நீதியினால் கொண்டு நடத்தப்படுகின்ற அரசியல் வாதிகள், அரச ஊழியர்கள் தமது சொத்து விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். அதுவே அவர்களின் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு சிறந்தாகும் என்றும் அவர் சொன்னார்.

ஊடகவியலாளர்களின் சொத்து விபரங்களை அரசாங்கம் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரகடனப்படுத்த வேண்டும் என கோரியுள்ளது. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி நாட்டில் மக்கள் நீதியினால் கொண்டு நடத்தப்படுகின்ற அரசியல் வாதிகள், அரச ஊழியர்கள் போன்ற அனைவரும் தமது சொத்து விபரங்களை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் மக்கள் நீதியினால் கொண்டு நடத்தப்படுபவர்கள் அல்ல. இருந்தபோதிலும் அவர்களும் மக்கள் மத்தியில் அதிகமாக பேசப்படுகின்றனர். அதனால் அவர்களுடைய சொத்து விபரங்களை அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதில் தவறில்லை. அவ்வாறு சமர்பிப்பது அவர்களுடைய நேர்மைக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் சிறந்ததாகும் என்றார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் தமது சொத்து விபரங்களை ஒழுங்கு முறையின் கீழ் வெளியிடாத நிலையில் ஊடகவியலாளர்களின் சொத்து விபரங்களை அரசாங்கம் கோருவது ஊடாக அடக்கு முறையின் ஒரு அம்சமாக கருத முடியாதா? என கேட்ட போது, நாட்டின் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாள்ர்கள் மீதும் அடக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை யாவரும் அறிவார்கள்.

அதனை முடிவுக்குக்கொண்டு வருவதற்காகவே பொதுத்தேர்தலில் எமக்கு அதிகாரத்தை பெற்றுத்தருமாறு கோருகின்றோம். ஆனால் ஊடகவியலாளர்களின் சொத்து விபரங்களை கோருவது ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறையாக கருத முடியாது. கருதவும் கூடாது.

1998ஆம் ஆண்டின் பிரகடனத்திற்கு அமைவாகவே இந்தச் சொத்து விபரங்கள் கோரப்பட்டுள்ளன. ஆகையினால் ஊடகவியலாளர்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பிப்பது சிறந்தாகும்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் தமது சொத்துவிபரங்களை ஒழுங்கு முறையின் கீழ் வெளியிடாமல் இருந்தால் அதற்கான சட்ட நடவடிக்கைகளை நீதிமன்றம் எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஓ-4)

## அரசாங்கத்திடம் நாட்டை கட்டியெழுப்பும் எவ்வித திட்டமுமில்லை - ஐ.தே.க

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நெருங்கிவருகின்ற நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகின்றது. போலி வாக்குறுதிகளை அள்ளி வீசி மக்கள் மனங்களை வெல்ல வேண்டிய அவசியம் எமக்கில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திடம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான எவ்விதமான திட்டங்களும் இல்லை. கடந்த நான்கு வருட கால ஆட்சியில் இளைஞர்களுக்கென எந்தவிதமான திட்டங்களும் முன் வைக்கப்படவுமில்லை, அமுல்படுத்தப் படவுமில்லை. பொதுத் தேர்தலின் பின்னரும் எமது ஆட்சியின் கீழ் இளைய தலைமுறையினருக்கு சுபீட்சமான எதிர்காலத்தினை வழங்குவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபையின் உறுப்பினர் மனுஷ நாணயக்கார எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

ஐக்கிய தேசியக்கட்சி எப்போது ஆட்சியதிகாரத்துக்கு வந்தாலும் இளைய தலைமுறையினரை இலக்காக வைத்து அவர்களுக்கென பல்வேறுபட்ட அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

இன்று நாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு சரியான தொழில் வாய்ப்புக்கள் கிடையாது. குறிப்பாக கிராமப்புறங்களில் தொழில் பிரச்சினை உச்ச அளவில் தலைவிரித்தாடுகின்றது. மகிந்த சிந்தனையின் மூலமாக கிராமப்புறங்கள் கட்டியெழுப்பப்படுவதாகவும் அதற்கென பல்வேறு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறும் அரசாங்கம் அவற்றுள் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு விடயத்தில் கவனம் செலுத்தத் தவறிவிட்டது.

அன்று ஜேர்.ஆர். ஜெயவர்த்தன முதல் ரணில் விக்கிரமசிங்க வரை ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆட்சி புரிந்த கால கட்டங்களில் எல்லாம் தொழில் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது கிடையாது. அதற்குக் காரணம் எமது ஆட்சியில் இளைஞர்களின் தொழில் வாய்ப்பு விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்தமையாகும்.

பொதுத் தேர்தலின் பிற்பாடு எமது ஆட்சியின் கீழ் உடனடியாகவே இளைஞர்களின் சகல விடயங்களுக்கும் எம்மால் கவனம் செலுத்தப்படும். விசேடமாக ஏராளமான தொழிற்சாலைகளை நிறுவி அவர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்க நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கூடவே தகவல் தொழில் நுட்ப பயிற்சி, ஆங்கில் மொழிப் பயிற்சியும் இவர்களுக்கு வழங்குவதற்கென பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். பாடசாலை மட்டத்திலிருந்தே ஆங்கில மொழி அறிவினை புகட்டுவது அவசியமாகும்.

இன்று கல்வித்துறையில் ஓய்வு பெறும் வயது வந்தும் கூட பலர் ஆசிரியர்களாக பணி புரிந்து வருகின்றனர். இதனால் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதும் இங்கே தடைப்படுகின்றது.

எமது ஆட்சியில் ஆசிரிய சேவையில் தகுதி வாய்ந்த இளைஞர், யுவதிகளே உள்வாங்கப் படுவார்கள் என்றார். (2-4)

## பாடசாலை வேளையில் பாரிய வாகனங்களால் இடையூறு

(யாழப்பாணம்)

யாழ். குடாநாட்டின் வீதிகள் காலை வேளை பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், ஏனைய அலுவல்களுக்காக விரையும் பயணிகளால் மிகவும் சந்தடி மிகுந்ததாகவே காணப்படும்.

இவ்வேளைகளில் வியாபார நிமித்தம் தென்னிலங்கையில் இருந்து வரும் பெரிய வாகணங்களில் பிரசன்னமும் அதிகரித்து காணப்படுகின்றது.

சிறிய வீதிகளின் இந்நேரங்களில் பெருமளவான வாகனங்களின் போக்குவரவு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே காலையில் பாடசாலை நேரத்தை தவிர்த்து ஏனைய நேரங்களில் தமது பிரயாண நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டால் நல்லது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (2)


## பாராளுமன்றத் தேர்தல் - 2010
### இலங்கை மக்கள் கட்சி - (ஸ்ரீலங்கா ஜாதிக பெரமுன)
### சுயேட்சைக்குழு - 11

- தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பிரச்சினைகளை நன்கு புரிந்து கொண்ட இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன். சீரான தலைமையைப் பெறவும் பலப்படுத்தவும், உங்கள் வாக்கை இம்முறை மாம்பழத்துக்கு இட்டு விருப்பு வாக்கை எனது இலக்கமான 4 இற்கு இடுக.
- உதவி விரிவுரையாளராக, ஆசிரியராக, கிளிநொச்சிப் பிரதேச மேலதிக அரச அதிபராக, துணுக்காய், பாண்டியன்குளம், கரைச்சி, யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபராக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பதிவாளராக, யாழ் மாநகர சபை ஆணையாளராக, வடமாகாண பிராந்திய ஆணையாளராக, வளர்ப்பு பெற்றோர் சங்கத்தின் தலைவராக, திருநெல்வேலி லயன்ஸ் கழக ஆரம்ப கர்த்தாவாக, தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக, யாழ் இலக்கியவட்டம் இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவராக, உலக வங்கி ஆலோசகராக, இலக்கிய கலாபூஷணமாக, சாகித்ய ரத்னமாக,வில்லூன்றி புனித தீர்த்தத் தலத்தின் தலைவராக, கலட்டி அம்மன் ஆலய அறங்காவல் தலைவராக, இலக்கிய எழுத்தாளராக (செங்கை ஆழியான்), பாடநூல் ஆசிரியராக, மாணவர்களுக்கும் சமூகத்தினதும் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் பணியாற்றிய நான் இன்று அரசியலில் ஈடுபட்டு அதன் மூலம் எம் மக்களுக்கு பணியாற்ற விரும்புகிறேன். எனது சின்னம் மாங்கனிக்கும் இலக்கம் 4 இற்கும் புள்ளடியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.
- தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெறுதல், வலி வடக்கின் மீள் குடியேற்ற உரிமைப் போரினால் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, சமூக சமநிலையின்மை, காணாமல் போன உறவுகளைக் கண்டறிதல் ஆகியவற்றை உடனடி இலக்காகக் கொண்டு செயற்படுகின்றோம்.



X 4

(சி/4878)

கலாநிதி கந்தையா குணராசா (செங்கை ஆழியான்)


## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்பாள் தேவஸ்தானத்தின் திருவூஞ்சலும் திருப்பதிகமும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் மாலை நேர பூசை வழிபாட்டை தொடர்ந்து நடைபெறவுள்ளதாக தேவஸ்தான நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஓ-4)

# பள்ளி மாணவனைக் குத்திக்கொன்ற 12 மாணவர்கள் உட்பட 24 பேர் கைது

(லண்டன்)

இங்கிலாந்தில் மேற்கு லண்டன் பகுதியை சேர்ந்தவன் சோபியன் பாலமுதன் (15) இவன் மேற்கு லண்டன் பகுதியில் புல்காம் என்ற இடத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்து வந்தான்.

மாலையில் பள்ளி முடிந்து வீடு திரும்பி னான். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள லண்டன் விக்டோரியா பகுதி சுரங்க ரெயில் நிலையத்தில் அவனை சிறுவர்கள் கும்பல் கத்தியால் குத்தியது.

இதனால் இரத்த வெள்ளத்தினால் உயி ருக்கு போராடிய அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் வழியிலேயே பரிதாபமாக இறந்தான்.

இது குறித்து லண்டன் மெட்ரோ பாலிட் டன் பொலிசார் வழக்கு பதிவு செய்தனர். விசா ரணை நடத்தியதில் அவனை உடன் படிக்கும் பள்ளி சிறுவர்கள் மற்றும் சிலர் குத்தி கொன் றது தெரியவந்தது.

இது தொடர்பாக 24 பேர் கைது செய்யப் பட்டனர். அவர்களில் 12 பேர் பள்ளி சிறுவர் கள். சோபியன் கொலை செய்யப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. பள்ளியில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கொன்று இருக்க லாம் என பொலிசார் தெரிவித்தனர். (இ-4)

# பட்டதாரிகளுக்கு குடியுரிமை விசா ஏப்ரல் 1 முதல் டுபாயில் அறிமுகம்

(டுபாய்)

பட்டதாரிகளுக்கு மட்டும் குடியுரிமை விசா வழங்குவதென டுபாய் முடிவு செய்துள்ளது. இப்புதிய நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகி றது.

இதன் மூலம் அதிக எண்ணிக்கையி லான தொழிலாளர்கள் குடியுரிமை பெறு வதைத் தடுக்க முடியும் என டுபாய் அரசு எதிர் பார்க்கிறது.

பணி விசாக்களை நிரந்தர விசாக்களாக மாற்றும் முறையை நிறுத்தவும் முடிவு செய் துள்ளது.

இங்குள்ள நிறுவனங்களில் பணி புரியும் தொழிலாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு முன்னர் தொழில் முறை விசாக்கள் மாற்றி அளிக்கப்பட்டன. இனி புதிய நடைமுறை அடுத்த மாதம் 1 ஆம் திகதி முதல் பின்பற்றப்படும் என்று கூறப்பட்டுள்ளது.




வேலை செய்வதற்கான உரிமை பெற்று டுபாயில் பணி புரிவோர் நிரந்தர குடியுரிமை கோரி விண்ணப்பிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தொழிலாளர்கள். இதைக் குறைக்கும் பொருட்டு பட்டம் பெற்றதற்கான சான்றிதழை இணைத்து அனுப்புவோருக்கு மட்டுமே இனி நிரந்தர குடியுரிமை விசா வழங்கப்படும் என்று குவைத்தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் சட்டத்திலும் குவைத் மிகப் பெரும் சீர்திருத்தத்தைக் கொண்டு வர உள் ளது. மிகவும் கீழ் நிலையில் உள்ள பணியா ளர்களை முற்றிலுமாக நீக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.


அத்துடன் பிற நிறுவனங்களுக்காக பணி யாளர்களை அளிக்கும் ஸ்பொன்சர்ஷிப் முறையையும் இரத்துச் செய்ய முடிவு செய் துள்ளது. (2-4)



தற்கொலைப் படை தாக்குதல் நடந்த ரஷ்யாவின் மாஸ்கோ, லுப்யங்கா மெட்ரோ ரயில் நிலையத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் அதிபர் டிமிட்ரி மெத்வதேவ் கலந்து கொண்டார்.

# பாகிஸ்தான் அதிபர் சர்தாரி மீது இலஞ்ச வழக்கு

(இஸ்லாமபாதி)



பாகிஸ்தான் அதிபர் சர்தாரி மற்றும் அவரது ஆதரவாளர்கள் 8 ஆயிரம் பேர் மீது இலஞ்ச ஊழல் வழக்குப்பதிவு செய்யப்பட் டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 2007 ஆம் ஆண்டு அதிபராக இருந்த முஷரப் அவசர சட்டத்தின் மூலம் இந்த வழக்குகளை இரத்து செய்தார்.

இந்த நிலையில் ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக் கும்படி பாகிஸ்தான் அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால் அவருக்கு நெருக்கடி ஏற்பட்டது.

ஆனால் இலஞ்ச ஊழல் எதிர்ப்புத் துறை அதிபர் சர்தாரி மீதான வழக்கை விசாரிக்காமல் கிடப்பில் போட்டது. நீதிமன்றை அவமதித்ததாக கூறி இத்துறையின் தலைவருக்கு உயர் நீதிமன்றம் நோட்டீசு அனுப்பியது. மேலும் 24 மணி நேரத்துக்குள் சர்தாரி உள்ளிட்டோர் மீதான இலஞ்ச ஊழல் வழக்கு விசாரணையை தொடங்க வேண்டும் என பாகிஸ்தான் அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. (2-4)

# பொதுத் தேர்தலில் பங்கேற்க போவதில்லை ஆன் சாங் சூகியின் கட்சி அறிவிப்பு

இரண்டு தசாப்த காலங்களுக்கு பின்னர் பர்மாவில் நடைபெறவுள்ள முதலாவது பொதுத் தேர்தலில் பிரதான கட்சிகளில் ஒன்றான ஆன் சாங் சூகியின் தேசிய ஜன நாயக லீக்கட்சி பங்கேற்கப் போவதில்லை என அறிவித்துள்ளது.




தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாகவும் தமது கட்சிக்கு பாரிய அநீதி இழைக்கப்பட் டுள்ளதாகவும் அந்த கட்சியின் ஊடகப் பேச் சாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் தமது கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலை நிராகரிக்கத் தீர்மானித்துள்ளதா கவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆன் சாங் சூகி தேர்தலில் பங்கேற்க முடி யாது எனவும் அவருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டுள் ளதாகவும் பர்மாவில் ஆட்சி நடத்தி வரும் இராணுவ ஆட்சியாளர்கள் அண்மையில் அறிவித்திருந்தனர்.

பொதுத் தேர்தல்கள் எப்போது நடை பெறும் என்பது குறித்த திகதி அறிவிக்கப்படாத போதிலும் இந்த ஆண்டிற்குள் தேர்தல் நடத் தப்படும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆன் சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி இறுதியாக 1990 ஆம் ஆண்டு நடை பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய போதிலும் ஆட்சி நடத்த அனுமதிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பர்மாவின் அரசியல் சூழ்நிலை குறித்து உலகின் பல நாடுகளும் கடும் அதிருப்தியை வெளியீட்டு வருகின்றன. புதிய தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல்க ளில் போட்டியிடுவதில்லை என ஆன் சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி உறுப் பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்கள் ரங் கூனில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள் ளனர். (2-4)

# பேஸ்புக் இணையதளத்தால் பாலியல் நோய் அதிகரிப்பு

(லண்டன்)

பேஸ்புக் போன்ற சமூக நெட்வொர்க் இணைய தளங்களால் முன்பின் அறியாதவர் கள் இடையே செக்ஸ் தொடர்பு ஏற்படுவதால் பால்வினை நோய்கள் அதிகரிப்பதாக இங்கி லாந்து மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள் ளனர்.

இதுபற்றி லண்டனில் வெளியாகும் டெலி கிராப் பத்திரிகையின் இணைய தளத்தில் வெளியான செய்தி வருமாறு,

சமூக நெட்வொர்க் இணைய தளங்களில் இணையும் டீன்ஏஜ் ஆண், பெண்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதற்கேற்ப முன்பின் அறியாத வர்கள் இணைய தளம் மூலம் அறிமுகமாகி பாலியல் உறவு வைத்துக் கொள்வது நடக் கிறது.

இதனால் லண்டனின் சந்தர்லாண்ட், துர்காம், டீசைட் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பலருக்கு சைபிலிஸ் என்ற பால்வினை நோய் ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக பேஸ்புக் இணையதளம் இந் தப் பகுதிகளில் மிகவும் பிரபலமாக உள்ளது. அதன்மூலம் புதியவர்களை சந்திக்கும் இள வயதினர் பாதுகாப்பற்ற உறவில் ஈடுபடுகின் றனர்.

இதுபற்றி டீசைட் பொது சுகாதார இயக்கு னர் பீட்டர் கெல்லி கூறுகையில்,

சைபிலிஸ் போன்ற பால்வினை நோயா ளிகளிடம் நடத்திய விசாரணையில் இது போன்ற சமூக இணையதளங்களின் முக் கிய பங்கு இருப்பது தெரிய வந்தது. இது போல பாதுகாப்பற்ற உறவு கொள்பவர்க ளுக்கு பால்வினை நோய் மட்டுமின்றி எச்.ஐ.வி தொற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகம் என்றார். (இ-4)

# டயானா கொலை? திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட சதி!

## வழக்கறிஞர் புதிய தகவல்

(லண்டன்)

இளவரசி டயானா கொலை செய்யப் பட்டதாக தற்போது தகவல் வெளியாகியுள் ளது. டயானா இறந்து 13 ஆண்டுகள் ஆன நிலையிலும் இவரது மரணம் குறித்து புதுப் புது தகவல்கள் பல்வேறு கோணங்களில் அவ்வப்போது வெளியாகிக் கொண்டேயிருக் கின்றன.

இளவரசி டயானா அவரது காதலன் டோனி அல்ஃபயத்துடன் பாரிஸ் நகரில் காரில் சென்ற போது விபத்தில் சிக்கி இற வரும் உயிரிழந்தனர்.

இருவருக்கிடையிலான உறவை முறியடி ப்பதற்காக இந்தக் கொலை நிகழ்த்தப்பட் டுள்ளது என்று பிரிட்டனின் முன்னணி வழக்கறிஞர் மைக்கேல் மேன்ஸ்ஃபீல்ட் தக வல் வெளியிட்டுள்ளார்.



1997 ஆம் ஆண்டு பாரி ஸில் உள்ள அல்மா சுரங்க சாலையில் நிக ழ்ந்த கார் விப த்து முன்கூட் டியே திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட கொலைச் சதி என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருவரையுங்கொலை செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் மிகப்பெரிய விபத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இருவரையும் பிரிக்க சதி செய்யப்பட்டதாக தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சதியின் பின்னணி யில் யார் இருக்கிறார்கள் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவேயில்லை. (இ-4)

# மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

யோகர்சுவாமிகள், செல்லப்பதேசிகர் அருளால் சிவபோகத்தில் பொருந்திய இடம நல்லூர்த் தேரடி. அவர் அரை நூற்றாணடு காலமர்க உறைந்து சிவ தொண்டு புரிந்த இடம் கொழும்புத் துறை ஆச்சிரமம். தமது சாந்நித்தியம் என்றும் நின்று நிலவும் வண்ணமாய்க் கோவில்கொண்டருளும் இடம் சிவ தொண்டன் நிலையம்.

செல்லப்பமூர்த்தம் ஒரு சிவமூர்த்தமே. யோகர் சுவாமிகள் இம்மூர்த்தத்தை மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த நல்ல மூர்த்தம் எனப் போற்றுவார். இக்குரு மூர்த்தம் யோகர் சுவாமிகளைத் தம்மோடு கூடக் குடியிருத்தி ஞானவித்தையின் நுட்பங்களையெல்லாம் ஒன்றும் ஒழியாமற் போதித்து, அப்போதனை நிறைவுற்றபின் ஒருநாள் யோகர் சுவாமிகளை உவகை பூத்த முகத்துடன் உற்று நோக்கி "ஒரு பொல்லாப்புமில்லை" என்று அருவமும் காட்டி உருவமும் காட்டி அபபாற்கப்பாலாம் அருள்நிலை காட்டிக் காட்டி அந்தம் ஆதியில்லாச் சொருபமும் காட்டிச் சும்மா இருக்கும் சூட்சுமத்தில் மாட்டி விட்டார்.

அந்த நன்மோன நிறைவில் மாட டுப்பட்டுக் கிடக்கும் நிலையினின்றும் பின் கணமேனும் சுவாமி பிரிந்திருந்ததில்லை. அவர் சந்ததமும் மோன நிலை தவறாத ஞானநிட்டர்.

அவர் செல்லப்பரைப் போற்றிச் சொன்ன "ஆறாறுதத்துவத்துக்கப்பாலே உள்ளவன், மாறாக்கருணையன், மருமத்தில் மருமமாயிருப்பான், மாதவரு மறியாத மகத்தான்" என்னும் மொழிகள் அவருக்கும் பொருந்துவதே *(இத்தகைய மகத்தான ஞான குரவனை சித்து மயக்கத்தில் அகப்பட்ட கூட்டத்துள் ஒருவராக வைத்துக் கிளிப்பிள்ளை போலச் சொல்லிவருவது அழகன்று)*

ஆசான் அருளால் ஆசானான யோகர் சுவாமிகளது திருவுள்ளத்திலே ஆசான் தமக்கு ஈந்த அனுபவசித்தாந்தத்தை உலகறிய விளக்கம் செய்யவேண்டுமென்ற திருக்குறிப்புத் தோன்றியதும் கொழும்புத்துறைக் கொட்டிலிற் போய மர்ந்தார்.

தக்கவர்களைத் தேடி யாழ்ப்பாணத்துச் சந்தி தெருக்கள், சந்தை கடைகளெங்கும் திரிந்தார். நம்மவர் உத்தி யோகம் புரிந்த கொழும்புப்பட்டினம், கண்டி மலைநாடெல்லாம் மாதம் ஒரு முறை சுற்றிவந்தார்.

ஒரு ஞானிக்கும் ஞானநாட்டமுடையோர்க்குமான சம்பந்தம் மலருக்கும் மது வண்டுக்கும் உள்ளதும், பழமரத்துக்கும் வௌவாலுக்கும் உள்ளதும் போன்ற சம்பந்தமெனவே தோன்றுகின்றது.

சுவாமிகளை ஒரு பெரும் திருக்கூட்டம் சூழ்ந்தது. அத்திருக்கூட்டத்தில் சித்தாந்த சாத்திர நூல்களைச் சிந்தித்துச் சிந்தித்து சோதியாய்ப் பரிணமித்த திருவிளங்க தேசிகர் ஆதிய தீவிர தரபக்குவர்கள் இருந்தனர்.

திருவடியின்பத்தைக் குறியாகக் கொண்டு சுவாமிகளின் பின்னே முன் பின் நாடாது செல்லவல்ல மார்க்கண்டு சுவாமிகள் முதலான உத்தமச் சீடர்கள் இருந்தனர்.


பிரம்மஸ்ரீ கணேசய்யர், சோமசுந்தரப் புலவர் ஆகிய இரு மொழிக்கடல்களும் பழுத்ததமிழ்ப்புலவர்களும் இருந்தனர். சேர். பொன். இராமநாதன் போன்ற நாட்டுத் தலைவர்கள் கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு வந்து திருக்கதவம் திறக்கும் தருணம் பார்த்துக் கிடுகிடென்ற நடுக்கத்துடன் நின்றனர்.

பண்டாரநாயக்கா தலதா மாளிகைக்குட் செல்வது போன்ற பக்குவதுடன் கொழும்புத்துறைக் கொட்டிலுட் புகுந்து சுவாமிகளின் ஆசி வேண்டி நின்றனர்.

அபயசேகர, திகிரிபண்டார, சுசநாக வீரப்பெரும் ஆகிய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்றனர். இராம கிருஷ்ண மடத்துத் தலைவராயிருந்த சுவாமி அசங்கானந்தா மகராஜ் தாம் தரிசித்த இரு மகத்தான ஞானியருள் யாழ்ப்பாணச் சோதியான யோகர் சுவாமிகள் ஒருவர் எனப் போற்றினார்.

கனேடியத் தூதுவராய்ப் பணிபுரிந்த கலாநிதி ஜோர்ஜ் சுவாமிகளைத் தமது ஆன்மீகக் குருவாகக் கொண்டு அடிக்கடி தரிசித்து மோனத்தேன் பருகிக் களித்தார்.

சோல்பரிப்பிரபுவின் புதல்வரான றாம்ஸ்போதம் என்பவர் சந்தசுவாமி எனும நாமம் சூடி சுவாமிகளின் துறவுச்சீடருள் ஒருவராய்ச் சிவதொண்டு புரிந்தார். நீதியரசராயிருந்த அக்பர் பொதுக்கூட்டங்களுக்கு விருந்தினராய்ச் சென்று உரையாற்றிய போதெல்லாம் சுவாமிகளைப் பற்றிச் சில வசனங்களாதல் சொல்வதில தவறாத சுவாமி பக்தராய் ஒழுகினார்.



ஸ்ரீகாந்தா போன்ற அரச அதிபர்கள் சுவாமிகளின் அடிப்பொடியாகப் பணி செய்தனர். ஆசிரியர்கள், வைத்தியர்கள் என்று அரச பணிபுரிந்தோரும், கமஞ் செய்தோரும் ஆச்சிமாரும், குழந்தைகளும் சுவாமிகளிடம் அன்பு பூண்டனர்.

குடிப்பழக்கத்தை விடமுடியாதோரும், கடத்தல் மன்னர்களும், நாத்திகரும

**சிவதொண்டன் சபையார்**

கூட சுவாமிகள் திருமுன்னிலையிலே பயபக்தியுடன் உடல் கோட்டி நின்றனர்.

தன்னில் எல்லாரையும் எல்லாரிலும் தன்னையும் காணும் பேரன்பாளர் ஒருவரிடம் எல்லாரும் அன்பு பூண்டிருத்தல் இயல்பன்றோ!

(தொடரும்)




தந்தை செல்வா வழியில்...
கடமை வீரர் பண்டிதர் கா.பொவின்
நெறியில்... தமிழர் தேசியத்தை நோக்கி...!
பேராசிரியரின் வெற்றிப் பயணம்!
நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
பேராசிரியர் இரா.சிவசந்திரன்
"நஞ்சாக்கப்பட்ட எமது காற்று வளம்
சிதைக்கப்பட்ட எமது நில வளம்
மாசாக்கப்பட்ட எமது கடல் வளம்
மொட்டையடிக்கப்பட்ட எமது பனை வளம்
மீட்போம்! மீட்போம்!!
ஆற்றல் வாய்ந்த மனித வளம் நாம்"




இலங்கை தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)
நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்
(அ-4880)
தீவுப்பகுதி புனரமைப்புக் கழகங்களின் ஒன்றியம்–ஐரோப்பா
பேராசிரியரின் வெற்றிக்கு எங்கள் வாழ்த்துக்கள்! உங்கள் வாக்குகள்!!


## அரசியல் சாசன ரீதியில்

# தமிழ், முஸ்லீம் மக்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்–மனோ

(கொழும்பு)



அரசியல் சாசன ரீதியில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கு இறைமை மிக்கதோர் அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பிளவுபடாத இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரங்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாலங்கள், வீதிகள், பாதைகள், பாடசாலைகள், வீடுகள் போன்றவை தமிழ் பேசும் மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் அமைத்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள மக்களும், தெற்கில் வாழும் தமிழ் மக்களும் இந்த நடவடிக்கைகளின் மூலம் புறக்கணிக்கப்படக்கூடாது. அவர்களுக்கு சமசந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். கடும் போக்குடைய இனவாத கொள்கைகளை புறந்தள்ளிய ஓர் அரசியல் கட்டமைப்பே நாட்டின் இன்றியமையாத தேவையாக அமைந்துள்ளது.


தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நேர்மையான முறையில் கடமையாற்றுவார்களானால் ஆளும் கட்சியினால் அரசாங்கத்தில் இணையுமாறு விடுக்கும் அழைப்பு குறித்து கவனம் செலுத்த முடியும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி ஓர் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த முனையும் கட்சியாகவே தாம் அடையாளப்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# டெங்குநோய் பரவும் இடங்களை இனம் காணல்

டெங்குக் காய்ச்சல் வேகமாக பரவும் 15 மாவட்டங்களில் 65 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கொழும்பு, கம்பஹா, கண்டி, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்கள் முதலிடத்தை பெறுவதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார். வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலும் டெங்கு நோய் அதிகமாக பரவி வருவதாகவும் இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)









யாழ். பாதுகாப்பு படை தலைமையகத்தின் சிவில் அலுவலர்கள் பொதுமக்கள் தொடர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற படையினரின் டெங்கு ஒழிப்பு நிகழ்வில் யாழ். சிவில் அலுவலர்கள் பொதுமக்கள் தொடர்பு பிரதம இணைப்பாளர் பிரிகேடியர் டெல்மை ஜி.பி, யாழ். அரச அதிபர் கே. கணேஷ், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீபவானந்தராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் படையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு தொடர்பான வீதி நாடக ஆற்றுகையினையும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினரையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள், விருந்தினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : டுசாந்தன்)

### இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு

## புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காண்பதே அரசின் நோக்கம்



(கொழும்பு)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு புதிய அரசியல் அமைப்பின் ஊடாக தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நோக்கம். தமிழ் மக்களின் அரசியல் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் சர்வகட்சி குழுவினரால் முன்வைக்கப்பட்ட ஐந்து யோசனைகள் ஜனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

செனட் சபை முறைமையை மீண்டும் நடை முறைக்கு கொண்டு வந்து பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை மீள் விவாதத்திற்கு உட்படுத்தப்படும். இச்செனட் சபைக்கு வடக்கு, கிழக்கு உட்பட சகல மாகாண சபைகளிலிருந்தும் பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்ற தேர்தலின் பின்னர் அரசாங்கம்முன்வைக்க உள்ள புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக தெளிவுபடுத்துகையிலேயே அமைச்சர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு கூறினார்.

இவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஏப்ரல் மாதம் எட்டாம் திகதியில் நடைபெறவுள்ள பொது தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படும் புதிய உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு சர்வகட்சிக் குழுவின் நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுக்கப்படும். இலங்கையின் தேசியப் பிரச்சினையை கருத்தில் கொண்டே சர்வகட்சிக் குழு உருவாக்கப்பட்டது. தமிழ் மக்களின் அரசியல் உட்பட ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றது.

எனவே தான் பொதுத்தேர்தலின் பின்னர் தற்போதுள்ள அரசியல் அமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து தேசிய பிரச்சினைக்கான தீர்வுகளை உள்ளடக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையில் முன்பு காணப்பட்ட செனட்சபையை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டும். இலங்கையின் தேசிய பிரச்சினைகள் தொடர்பாகவும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை மீண்டும் செனட் சபையில் விவாதத்திற்கு உட்படுத்துவதன் மூலமும் நேர்த்தியான மக்கள் தீர்விற்கு காரணமாக அமையும் எனக் கூறினார். (ஓ-6)

## போகம்பரைச் சிறை கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

கண்டி - போகம்பரைச் சிறையிலிருந்து நேற்று முன்தினம் கைதியொருவர் தப்பியோடியமை தொடர்பாகச் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

10 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இந்தக் கைதி நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் தப்பிச் சென்றதாகச் சிறை அதிகாரியொருவர் தனக்கு அறிவித்ததாகச் சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளரான சிறைச்சாலை நிர்வாக ஆணையாளர் கெனத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தப்பிச் சென்ற இந்தக் கைதியைக் கைது செய்யும் பொருட்டு பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததாகவும் நகரைச் சூழவுள்ள பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சிரேஷ்ட சிறைக் காவலர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நிர்வாக ஆணையாளர் தெரிவித்தார். (2-4)

## இலங்கையின் கடல் எல்லையை விரிவாக்க ஐ.நா.விடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது

### சுற்றுச் சூழல் அமைச்சர் சம்பிக்க



(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கைக்கு தங்கள் நிலப் பகுதியின் அளவைவிட 23 மடங்கு அதிகமான கடல் பரப்பை சொந்தமாக்கும் உரிமை கிடைக்க வாய்ப்புள்ளதாக இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் மேற் கொண்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

மீன்பிடித்துறை, கடல் வளங்கள் மற்றும் வெளியுறவுத்துறைகள் அனைத்தும் கூட்டாக இணைந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டதாக இயற்கைவளம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தங்களுக்கு இருக்கக்கூடிய கடல் மற்றும் நீர்ப்பரப்பளவுகளை வைத்துப் பார்த்தால் இலங்கை சிறிய நாடு என கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

தங்கள் அறிவியல் மற்றும் பூகோள ஆராய்ச்சியாளர்கள் 2007-2008 ஆம் ஆண்டுகளில் பூகோள மற்றும் கனிம வள மதிப்பீடுகள் அமைப்பின் தலைவர் என். எம். விஜயானந்தவுடன் கூட்டாக இணைந்து நடத்திய ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் இந்த மதிப்பீட்டு தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தங்கள் நாட்டிற்கு சொந்தமான வண்டல் மற்றும் கடல் படுகைகளின் அளவுகளையும் அளந்து கணக்கிட்டிருப்பதாகவும் இப்போது தங்களாலும் கடல் வளங்களை குடைந்தெடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆராய்ச்சி முடிவுகளை 2009 ஆம் ஆண்டுமே 9 ஆம் திகதியன்று ஐ.நாவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் இதே ஆராய்ச்சியை வெளிநாட்டினர் செய்திருந்தால் முடிப்பதற்கு அதிக காலம் பிடித்திருக்கும் என தான் உறுதியாக நம்புவதாக மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

### வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவே

## பொன்சேகாவின் உடல்நலம் பாதித்ததாக ஜே.வி.பி கூறுகிறது - டளஸ் அழகப்பெரும

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எவ்வித உடல் நலக்கேடும் ஏற்படவில்லை என மருத்துவ பரிசோதனைகளில் தெரிய வந்திருக்கிறது.

ஜே.வி.பி. வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறையாக அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறி பிரசாரம் செய்து வருவதாக போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபம் பெறும் நோக்கில் அனோமா பொன்சேகாவைப் பயன்படுத்தி ஜே.வி.பி இந்தப் பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை, பொன்சேகாவிற்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் சுகயீனம் குறித்து கடற்படையின் வைத்தியர்கள் மற்றும் ஏனைய வைத்திய நிபுணர்களைப் பயன்படுத்தி பரிசோதித்ததாகவும் எனினும் அவருக்கு எவ்வித நோயும் ஏற்படவில்லையென பரிசோதனைகளில் தெரியவந்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறியுள்ளார். இந்த மருத்துவப் பரிசோதனைகள் அனோமா பொன்சேகாவின் முன்னிலையிலேயே நடத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (2-4)

பாதம் பெயர்ந்திட ஓர் அடி போதும்
பரஞ்சுடரே வழிகாட்டு.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது!

பொதுத் தேர்தல் திருவிழாவில் நாடு மூழ்கியுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறும் வாக்கெடுப்போடு அந்த பிராக்கு முடிந்துவிட்டது.

அதேநேரம் திருவிழாக் காலக் கடைகள் போல வேட்பாளர்களும் காணாமல் போய்விடுவார்கள்.

வெற்றிபெற்றவர்கள் மற்றும் தோல்வி அடைந்தவர்களின் தேர்தல் பற்றிய விமர்சனங்களும் ஒரு சில நாட்கள் வைரவர் உற்சவம் போல தேர்தல் திருவிழாவை ஞாபகப்படுத்தும்.

அவ்வளவுதான். அதன் பின்னர் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையும் என்ற ஏக்கங்களை உருக்குலைக்கும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி தேர்தல் பிரசாரத்தில் பேசாத யாழ். மாவட்ட வேட்பாளர்கள் எவருமே இல்லை என்று கூறுமளவிற்கு இப்போது நிலைமை உள்ளது.

ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் எவரும் இனப்பிரச்சினை பற்றி பேசமாட்டார்கள். இதுவே தர்சனமான உண்மை.

அப்படியானால் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையும்? இந்தக் கேள்விக்கு ஆரோக்கியமான பதில் எதுவும் இல்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எதனையும் முன்வைக்கும் அறிகுறிகள் தென்படுவதாகத் தெரியவில்லை.

இப்போது தமிழ் மக்கள் பலமற்றவர்களாகி விட்டனர். நாடும் உலகமும் எங்களை அப்படியாக்கிவிட்டது என்ற உண்மையை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

உயர்ந்த இடத்தில் இருக்கும் போது இருக்கக் கூடிய கௌரவமும், மதிப்பும் ஆட்களில் வருகையும் ஆதரவும் தனித்துவமானவை.

அந்த உயர்வில் இருந்து விழுந்து விட்டால் மதித்தவர்களே மிதிப்பார்கள். அடிக்கடி தரிசிக்க வந்தவர்கள் ஏளனமாகச் சிரிப்பார்கள்.

கூட இருந்து தத்தம் தேவைகளை நிறைவு செய்தவர்களே எதிர்மறையாக விமர்சிப்பார்கள். இது மறம் தாண்டவமாடும் மண்ணில் நடக்கக் கூடியவைதான்.

இதில் இன்னும் வேதனை நொந்து போயிலுள்ள தமிழ் மக்களைச் சுண்டியும் சுரண்டியும் பார்க்கும் செயலாகும்.

ஆம், இலங்கை ஆட்சிக் கலாசாரத்தின் அநாகரிகமான குடியேற்றங்கள், கௌதம புத்த பிரானுக்கு அரசடியில் இடம்பிடித்து பிறசமயங்களை நிந்திக்கும் அநீதிகள், தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் புகுந்து வியாபாரம் செய்யும் துணிச்சல்கள், எல்லாமே எல்லை மீறப்போகின்றன.

என்ன செய்வது! எல்லா மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட நோயாளிபோல ஈழத்தமிழர்கள் வருத்தத்தை அனுபவிக்கின்றனர்.

நாங்கள் நோயை மாற்றுவோம் என்று கொக்கரிகின்றனர். இந்தக் கொக்கரிப்பும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரையும் தான். அதன் பின்னர் எங்களைத் தேற்றுவார் யார் உளர்?

## தமிழர் பிரச்சினையை தீர்க்க

# நல்ல தருணங்கள் வந்த போதிலும் அவை உதாசீனம் செய்யப்பட்டன-அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

காலத்துக்குக் காலம் தமிழர்களுடைய பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் வந்த போதிலும் அவற்றை அந்தந்தக் கால அரசியல்வாதிகள் தங்களது சுயலாபங்களுக்காக நழுவ விட்டனர் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அளவெட்டி கலைநகர் கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் முருகதாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 3 தசாப்த காலங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த யுத்தத்திற்கு முடிவு கட்டப்பட்டு இன்று ஜனநாயகச் சூழல் நிலவுகின்றது. இந்தச் சூழலை மக்களாகிய நீங்கள் சரியாகப் பயன்படுத்துங்கள். இல்லாவிடில் மீண்டும் பாரியதொரு அழிவையே சந்திக்க நேரிடும் என்றார். (ஓ-2)

# வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

(கொழும்பு)


மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தேர்தல் வன்முறைகளை அடக்குவதற்காக 250 பேர் கொண்ட விசேட அணியொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டி ருப்பதாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கைக் குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடு, தாக்குதல் என தேர்தல் வன்முறைச் செயல்கள் குறித்த பிரதேசத்தில் இடம்பெற்று வருவ தாகவும் அதனைத் தடுப்பதற்காக இவ்வாறு அணியொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டி ருப்ப தாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தல் வன்முறைகள் குறித்து விசா ரணை நடத்துவதற்காக கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் எடிசன் குண திலக் கவின் உத்தரவின் பேரில் பிரதான பரிசோதகர் ஒருவர் தலைமையில் மட்டக்க ளப்பிலி ருந்து இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் வாழைச் சேனைப் பகுதிக்கு அனுப்பப்பட் டுள்ளன.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத் திலிருந்து நேற்று முன்தினம்வரை வாழைச் சேனை பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. இவற்றில் குண்டுத் தாக்குதல், துப் பாக்கிச்சூடு, வீடுகளைத் தாக்கியமை, வாக னங்களைத் தாக்கி சேதப்படுத்தியமை உள் ளிட்டவை அடங்குகின்றன.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத் திலிருந்து இதுவரை வாழைச்சேனைப் பிர தேசத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 46 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த நிலைமையில் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வாகனங்கள் மற்றும் நபர்கள் கடுமையான சோதனைக்கு உட் படுத்தப்படுவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஓ)

# சேர் பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை தமிழகப் பேராசிரியர் இன்று நிகழ்த்துவார்



(யாழ்ப்பாணம்)

சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை இன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

இந் நினைவுப் பேருரையை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தத்துவத் துறை பேராசிரியர் க.பாஸ்கரன் நிகழ்த்துவார்.

'உலக மயமாக்கலும் பண்பாடு' என்ற பொருளில் நினைவுப் பேருரை இடம்பெறும். சைவ சித்தாந்தத்தில் உள்ள இறை யுண்மைகள் என்ற விடயத்தில் கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் க.பாஸ்கரன் உலகநாடுகள் பலவற்றிலும் இடம்பெற்ற கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்த அறிவியலாளர் என்ற பெருமைக்குரியவர். (ந)

# வன்னியில் இருந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவுதொகை வழங்கப்பட்டது-அரச அதிபர்


(யாழ்ப்பாணம்)

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக அவுஸ்திரேலிய நாட்டின் நிதியுதவியுடன் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வதார உதவு தொகை வழங்க 550 மில்லியன் ரூபாய் நீகோட் திட்டப்பணிப்பாளர் மூலமாக கிடைக்கப்பெற்று இந்நிதியில் 15 பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள்/ உதவி அரசாங்க அதிபர்கள் சிபார்சுகளின் பிரகாரம் தகுதியான 22 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கும் அனைத்து செயற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கொடுப்பனவை பதினைந்து நாட்களுக்குள் வழங்குவதற்கு சகல உதவிகளையும் நல்கிய புனர்வாழ்வுக்கிளை திட்டப்பணிப்பாளர், உதவி திட்டப்பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நீகோட் திட்ட முகாமைத்துவ அலுவலக உத்தியோகத்தர்கள், வங்கி அலுவலர்கள், அறிவித்தல்களை பிரசுரித்து உதவிய பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் இக் கொடுப்பனவு நடவடிக்கைகளில் பங்களித்த சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும்.

வாழ்வதார கொடுப்பனவை பெற்றுக்கொண்ட பயனாளிகள் இச்சிறுதொகை மூலம் தங்களின் வாழ்தாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்து வாழ்வில் ஒரு அடியாவது முன்வைப்பதற்கு முழுமுயற்சியை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கூறினார். (சு)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## மதமும் ஒழுக்கமும்

ஆன் மீகத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையாக அது தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளாவிட்டால் இன்னும் ஐம்பதே ஆண்டுகளில் நொறுங்கி அழிந்துவிடும் ஐரோப்பாவை இத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியவை உபநிஷத உண்மைகளே ஆகும். (சுவாமிஜி 1897இல் சொன்னது)

வேதங்கள், பைபிள், குரான் ஆகிய இவற்றுக்கும் அப்பால் மக்களை நாம் அழைத்துப் போக விரும்புகிறோம். என்றாலும் இந்தச் செயலை வேதங்கள், பைபிள், குரான் ஆகியவற்றைச் சமரசப்படுத்திவைப்பதன் மூலமாகத்தான் சாதிக்க முடியும் எல்லா மதங்களும் ஒரு பரம்பொருளை அந்த ஒரே ஒரு மதத்தின் புறத்தோற்றங்களே ஆகும்.

# வாக்கு எண்ணும் நிலையங்களில்
# உள்ளூர் பிரதிநிதிகளின் செயற்பாடு சிறந்தது என அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையங்களில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்துமாறு நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தபோதிலும் அந்தக் கோரிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார் என ஐக்கிய தேசிய முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை உள்ளூர் பிரதிநிதிகளின் கண்காணிப்பில் கடந்த காலங்களில் பல தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் நடத்தப்பட்டுள்ளன. அவர்களின் செயற்பாடுகள் சிறந்தனவாகவே அமைந்தன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்களில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணி கோரிவிடுத்தமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேராவும் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினரும் எம்.பி.யுமான ஜோசப் மைக்கல் பெரேரா கருத்து தெரிவிக்கையில்,

வாக்கெண்ணும் நிலையங்களில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல்கள் ஆணையாளரை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் நாங்கள் இவ்விடயத்தை வலியுறுத்தினோம். எமது இந்த கோரிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துவிட்டார். கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் இவ்வாறான கோரிக்கையை நாங்கள் ஆரம்பத்திலேயே விடுக்கவில்லை என்று காரணம் கற்பிக்கப்படுகின்றது. இந்த விடயத்தை தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவித்துள்ளார்.

எனினும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவேண்டும் என்ற எமது கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்துகின் றோம் என்றார்.

இவ்விடயம் தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் நடத்தப்படுகின்ற தேர்தல்களில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலின் போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணியே வலியுறுத்தி வருகிறது.

எனினும் கடந்த காலங்களில் பல தேர்தல்களை மிகவும் சுதந்திரமாகவும் நீதியான தாகவும் நாங்கள் நடத்தியுள்ளோம்.

நாட்டில் நடைபெறுகின்ற தேர்தல்களில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டியதில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எமது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இருக்கின்றன. அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்றார். (2-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு பண்டாரக்குளம் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்த 15 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறமும், 14 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (2-4)

## வீதி விபத்தில் யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோ - மோட்டார்சைக்கிள் விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று காலை 10 மணியளவில் நல்லூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தின் போது கல்வியங் காட்டைச் சேர்ந்த க. சுபாஷினி (வயது 22) என்பவரே காய மடைந்தவராவார்.

குறித்த இளம் யுவதியின் தலை, கழுத்து ஆகிய பகுதியில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை யின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் சட்டக் கல்லூரியின் 2 ஆம் ஆண்டு மாணவி என தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-30)

## ஜனாதிபதி பதவிக் காலத்தை
# மூன்றாவது தவணைவரை நீடிப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும் - ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக் காலத்தை மூன்றா வது தவணை வரையிலும் நீடிப்பதே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திட்டமாகும் என ஜே.வி.பி. கருத்து வெளியிட்டுள்ளது.

இதற்கமைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி பீடமேறினால் இரண்டு தவணைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் அது தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ள ரில்வின் சில்வா மேலும் 2000 ஆம் ஆண்டில் சந்திரிக்க பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டங்களை மீளவும் அமுல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டுள்ளார். தேசியப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அறிவிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த போதிலும் இதுவரையில் அது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை என்றும் முக்கியமான விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் பொதுவான ஓர் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசியல் சாசனமொன்று உரு வாக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போதைய அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என அரசாங்கம் அண்மையில் பிரசாரம் செய்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

# ஐ.தே.மு., ஐ.ம.சு. கூட்டமைப்பு வேட்பாளர்களிடையே மோதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் இடையில் ஓட்டமாவடி பிர தேசத்தில் ஏற்பட்ட மோதல் சம்பந்தமாக ஐக்கிய தேசிய முன் ணியின் நான்கு ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பைச் சேர்ந்த இரண்டு ஆதரவாளர்கள் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

அமைச்சர் அமீர் அலியின் ஆதரவாளர்கள் சிலரும் ஐக்கிய தேசிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட் பாளர் மொஹதீனின் ஆதரவாளர்கள் சிலரும் ஓட்டமாவடி பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது இந்த மோதல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-4)

# இணுவில் பொது நூலகத்தின் புனருத்தாரண 8 ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனருத்தாரண எட்டாம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் இணுவில் பொதுநூலக தலைவர் க.தர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாக பிரதேச சபை செயலர் திருமதி சுலோச்சனா முருகநேசன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் கோண்டாவில் இந்துமகா வித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தான பிரதமருக்கு சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் ஆசியுரையையும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட பீடாதிபதியும் இணுவில் பொது நூலக போசகருமான பேராசிரியர் க. தேவராஜா தொடக்கவுரையையும் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் பரிசில் வழங்கல் மற்றும் நூலகர்களைக் கௌரவித்தல் ஆகியனவும் இடம்பெறும். (ஓ-4)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை-285 | 15.05.2010 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை -030 |
| 2 | வல்வெட்டித்துறை-141 | | |
| 3 | நெல்லியடி-106 | | |
| 4 | யாழ். ஸ்ரான்லிவீதி-030 | | |
| 5 | சேவை நிலையம், மானிப்பாய் -837 | | |
| 6 | சாவகச்சேரி -110 | 16.05.2010 | |
| 7 | அச்சுவேலி-107 | | |
| 8 | சுன்னாகம்-109 | | |
| 9 | காங்கேசன்துறை-031 | | |
| 10 | சேவை நிலையம், மல்லாகம் -899 | | |
| 11 | யாழ்.பிரதானவீதி-104 | 17.05.2010 | |
| 12 | சேவைநிலையம்,உரும்பிராய்-865 | | |
| 13 | சங்கானை -108 | | |
| 14 | யாழ்.பல்கலைக்கழகம்-162 | | |
| 15 | சேவைநிலையம்,திருநெல்வேலி-855 | | |
| 16 | யாழ். கன்னாதிட்டி -284 | 18.05.2010 | |
| 17 | சேவை நிலையம், இணுவில் -905 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/4942)

# மும்பை போராடி வெற்றி பஞ்ஜாப் அணி பரிதாபம்

மலிங்க, டவானின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 27 ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இதில் ஒரு போட்டியில் தடை விதிக்கப்பட்டமையால் அணித்தலைவர் சங்கக்கார விளையாடாத நிலையில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிக்கு மஹேலஜெயவர்த்தன தலைமைவகித்தார். இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி மார்ஷின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இருபது ஓவர்கள் நிறையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷோன் மார்க் 47 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 57 ஓட்டங்களையும் பியூஸ் சாவ்லா 13 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 18 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 20 ஓட்டங்களையும் இர்பான் பதான் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.


அத்துடன் உதிரிகளாக 21 ஓட்டங்களை மும்பை இந்தியன்ஸ் அணி வழங்கியது. பந்துவீச்சில் லசித் மலிங்க 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சகிர்கான் 3 விக்கெட்டுக்களையும் பிராவோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 19.3 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 164 ஓட்டங்களை குவித்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் டவான் 40 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் திவாரி 23 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் பொல்லாட் 20, சதீஸ் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பொப்ரா 3 விக்கெட்டுக்களையும் சிறிவஸ்தாவ, இர்பான் பதான் மற்றும் சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 7 ஆவது போட்டியில் 6 ஆவது வெற்றியைப் பெற்று 12 புள்ளிகளுடன் தொடரில் முதலாவது அணியாகவுள்ளது. இதேவேளை கிங்ஸ்லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 7 ஆவது போட்டியில் 6 ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் மலிக்கை கரம் பிடிக்கிறார்



(ஐதராபாத்)

இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக் இருவருக்கும் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது.

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்ஷாவுக்கும் அவரது குழந்தைப்பருவ நண்பரான முகமெட் சோஹறாப்புக்கும் கடந்த 2009ஆம் ஆண்டு ஜுலை 10ஆம் திகதி திருமண நிச்சயார்த்தம் ஐதராபாத்தில் நடைபெற்றது.

பின்னர் இவர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த ஜனவரிமாதம் நிச்சயார்த்தம் திடீரென ரத்தானது.

இந்நிலையில் நேற்று முன் தினம் பாகிஸ்தான் தனியார் தொலைக்காட்சியில் இந்திய டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக் இருவருக்கும் எதிர்வரும் 16 அல்லது 17ஆம் திகதி திருமணம் நடக்க இருப்பதாக செய்தி வெளியாகியது.

இது குறித்து இந்த தொலைக்காட்சியில் வெளியான செய்தியில்,

சொகைப் மலிக்கின் தாயார் ஐதரபாத்தில் உள்ள சானியா வின் பெற்றோரை சந்தித்து மலிக்-சானியா திருமணம் குறித்து உறுதி செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக்கை திரு மணம் செய்யவுள்ளமை தொடர்பில் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஷா தெரிவித்துள்ளதாவது,

எனது அத்தையின் வீடு டுபாயில் உள்ளது. எனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவரது வீட்டிற்கு சென்று தங்குவது வழக்கம்.

அப்போது டுபாயில் நடைபெறும் எங்களது உறவினர்கள் இல்ல விழாக்களில் கலந்து கொள்வேன்.

இதேபோல் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொய்ப் மலிக்கும், டுபாயிலுள்ள உறவினர் வீட்டிற்கு அடிக்கடி வருவார். நானும், அவரும் பல்வேறு விழாக்களில் ஒன்றாக கலந்து கொண்டோம். அப்போது இருவரும் நண்பர்களாக பழகினோம். இந்த நட்பு நாளாக நாளாக காதலாக மாறியது.

அவரது எளிமை, அடக்கம், கிரிக்கெட் ஆட்டத்திறமை போன்றவை எனக்கு மிகவும் பிடிக்கும். எதையும் ஒளிவுமறைவின்றி பேசுவார். எளிதில் கோபம் வராது.

டென்னிஸ் பற்றி நிறைய தெரிந்து வைத்துள்ளார். எனது ஆட்டத்தை பற்றி நிறைய விமர்சனம் செய்வார். இதெல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும். இப்படிப்பட்ட ஒரு திறமையாளர் எனக்கு கணவராக கிடைத்திருப்பது அதிர்ஷ்டம்.

நான் பாகிஸ்தான் வீரரை மணந்தாலும் இந்தியா சார்பில்தான் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்பேன். நான் பிறந்த மண்ணை மறக்க மாட்டேன். திருமணத்துக்கு பின்னர் இருவரும் டுபாயில் தங்கியிருக்க முடிவு செய்துள்ளோம் என்றார்.




## புலனாய்வு செயற்பாடு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகமே அரசுக்கு எதிரான குற்றச்சாட்டு களுக்கு உயிர் கொடுத்து சுவதேச சமூகத்தை முனைப்பாக்குவதில் செயற்பட்டு வருகிறது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவது எமக்கு நன்றாகவே தெரியும்.

நாடு கடந்த தமீழ அரசு என்ற கட்டமைப்பை உருவாக்கி தற்போது இலங்கை அரசுக்கு புதிய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த கட்டமைப்புக்களை நாம் நிச்சயம் உடைப்போம் அதற்கு உள் நாட்டிலும் வெளிநாட்டி லும் புலனாய்வு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளோம்.

இந்த கட்டமைப்புக்களை முற்றாக அழித்தொழிப்பதற்கு 10 வருடங்களும் ஆகலாம். கடந்த மே மாதம் போர் முடிபடைந்த பின்னரும் நாம் எமது இலக்குகளை மாற்றி அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து வருகிறோம் என்றார்.

இலங்கை அரசை ஐ.நா. விளக்கம் கோரியிருப்பது தொடர்பாக கருத்துக் கூறுகையில்-சரணடைந்த விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கு என்ன நடந்ததென்று ஐக்கிய நாடுகள் சபை விளக்கம் கோரியிருப்பது தமக்கு வியப்பை அளிக்கிறது.

மிகப்பாரதூரமான ஒரு விடயத்தை ஊடகவியலாளர் ஒருவரிடம் தான் அறிந்து கொண்டதாக அரசியல் வாதி ஒருவர் கூறினார் என்று தெரிவித்து அதனை ஆதாரமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை எம்மிடம் விளக்கம் கோருகின்றது என்றால் இதை விட பொறுப்பற்ற செயல் வேறு ஒன்றுமே இருக்க முடியாது.

உண்மையிலேயே ஐ.நாவின் இந்த செயல் எமக்கு வியப்பை அளித்துள்ளது.

போர் முடிந்து இரண்டு நாட்களுக்குப்பின்னர் தான் கேள்விப்பட்ட சம்பவத்தை போர் முடிபடைந்து 8 மாதங்களின் பின்னர் பொன்சேகா வெளியிட்டிருக்கிறார் என்றால், இதில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது என்பதை முதலில் உணர வேண்டும் என்றார். (ச-5)

## தனித்திருந்த...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி முகவரியிலுள்ள மூதாட்டி நீண்ட காலமாகத் தனித்து வசித்து வருகின்றார்.

இந்நிலையில் பிரஸ்தாப மூதாட்டிக்கு நேற்றுக் காலை உறவினர் ஒருவர் உணவு கொண்டு சென்ற போது அம் மூதாட்டி சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அப்பகுதிக் கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

மூதாட்டியின் உடலில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதுடன் வீட்டிலிருந்த பொருள்கள் அனைத்தும் தேடுதல் மேற்கொள்ளப் பட்டிருந்ததாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (ச-3,30)

## தேர்தல் கட...

ஈடுபடுத்தப்படவுள்ள 59 ஆயிரம் பொலிஸாருடன் முப்படையினரைச் சேர்ந்த 20 ஆயி ரம் பேர் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் நேர்மையானதுமான வன்முறையற்ற தேர்தல் வாக்களிப்பினை மேற்கொள்ளத்தக்க வகையிலேயே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## மோ.சைக்கிள் விபத்து...

ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதில் கரவெட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியரான ஒரு பிள்ளையின் தந்தையான ச.சாந்தகுமார் (வயது-32) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவருடன் பயணித்த போக்குவரத்துச் சபை ஊழியரான க.ரஜித்குமார் (வயது-27) எ[illegible]பவர் மயக்கமுற்ற நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மற்றைய மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த சபாரட்ணக் குருக்கள் ராஜேந்திரதேசிகர் (வயது-21) படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-24)

## ஐ.நா. செயலாளரின் நிபு...

யும் தேடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நிபுணர்கள் குழு சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் கூடிய அக்கறை செலுத்தாது என இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் மேற்படி அறிவிப்புக் காரணமாக இலங்கைக்கு எதிராக போர் மற்றும் மனித உ[illegible]மை மீறல்கள் குறித்து குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகளின் திட்டங்கள் தோல்வியடைந்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்த நிபுணர்கள் குழுவில் அமெரிக்கப் பேராசிரியர் பிரான்ஸிஸ் பொயிலை நியமிக்குமாறு அமெரிக்க மற்றும் பிரித்தானியாவிலுள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையை பான் கீ மூன் நிராகரித்ததாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

(ச-5)

## ஐ.நா...

உறுப்பினராக வருவதற்காகக் கடந்த மூன்று வருடங்களாக இந்தியா கடும் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராகும் போட்டியிலிருந்து இந்த வருட ஆரம்பத்தில் கசகஸ்தான் வெளியேறியது இந்தியாவுக்கு அனுகூலமானது என கருதப்படுகின்றது.

பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராக வருவதே இந்தியாவின் முதன்மையான நோக்கம் எனப் பாதுகாப்புச் சபை உறுப்பினருக்கான இந்தியாவின் பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

கசகஸ்தான் வெளியேறுவதற்கு முன்னர் இந்தியா 122 வாக்குகளைத் தனக்கு அனுகூலமாகக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது கசகஸ்தான் வெளியேறியுள்ள நிலையில் ஆசியாவிலிருந்து இந்தியா மட்டுமே போட்டியிடுவதால் அது மேலும் ஆதரவுகளைப் பெறலாம் என நம்பப்படுகின்றது.


இறுதியாக 1992 ஆம் ஆண்டு இந்தியா தற்காலிக உறுப்புரிமையைப் பாதுகாப்புச் சபையில் கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(எ-5)

## ...ங்கு...

இந் நிலையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-30)
















இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2010 இல் அச்சிட்டு வெளியிட